<table>
<tr><td colspan="3">வேதாரண்யம் நகராட்சியின் 2025-ம் ஆண்டு மே00 மாதம் 5ம் தேதி திங்கள்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.<br>முன்னிலை திரு மா.மீ.புகழேந்தி,</td></tr>
<tr><td>பொருள் எண்;.1</td><td>நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் பொதுத் திட்ட அனுமதி மற்றும் கண்காணிப்புக் குழுவின் 18–வது கூட்டத்தின் கூட்ட நடவடிக்கைகள் நாள் – 02–04–2025.இல் வேதாரண்யம் நகராட்சிக்கு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் 2025–2026–ம் ஆண்டு நிதிப்பகிர்வின் படி தார்சாலை மேம்பாடு செய்யும் பணிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி , கூட்ட நடவடிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் , ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது .<br>
<table>
<tr><th>வ.எ ண்.</th><th>நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் – சிப்பம்–2</th><th>மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில்</th></tr>
<tr><td>1.</td><td>Renewal of CC Road Perumal koil at Narandi Chetti kula theru–100005S001,VSV Nagar street–100006S060, in Vedaranyam Municipality.</td><td>11.00</td></tr>
</table>
அலுவலக குறிப்பு : 1) மன்றம் பார்வையிட்டு ஒப்புதல் வழங்கலாம் .<br>(ந.க.எண். 752/2025/இ1)</td><td>தீர்மான எண்.63 :<br>ஒப்புதல் வழங்கப்பட்டது</td></tr>
<tr><td>பொருள் எண்;.2</td><td>செயலாளர், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், சென்னை அவர்களின் காணொலி ஆய்வு கூட்டம் நாள். 27.03.2025ன் படியும் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வுகூட்ட அறிவுரைகளின்படியும், இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6 நகர்மன்ற உறுப்பினர் பதவிக்கு இடைத்தேர்தல் நடத்தப்பட வேண்டியுள்ளதால், தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு வழங்க வேண்டிய ஊதியம் மற்றும் எழுது பொருட்களுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு 1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.554/2024/சி1</td><td>தீர்மான எண்.64 :<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>பொருள் எண்;.3</td><td>செயலாளர், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், சென்னை அவர்களின் காணொலி ஆய்வு கூட்டம் நாள். 27.03.2025 தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்தும் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வுகூட்ட அறிவுரைகளின்படியும், இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6 நகர்மன்ற உறுப்பினர் பதவிக்கு இடைத்தேர்தல் நடத்தப்பட வேண்டியுள்ளதால் வாக்கு சாவடி மையத்தில் தேர்தல் தொடர்பான பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் பொது மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மேற்கொள்ளுதல் மற்றும் வாக்கு எண்ணிக்கை மையத்திற்கு பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு 1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>ந.க.எண்.554/2024/'இ1</td><td>தீர்மான எண்.65 :<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td>பொருள் எண்;.4</td>
<td>வேதாரண்யம் நகராட்சி நகரமன்ற தலைவர் அவர்களின் அலுவலக பயன்பாட்டு ஸ்கார்பியோ வாகனம் எண் – TN 51 AT 4748 வாகனத்தின் காப்பீட்டினை புதுப்பிக்க ( Renewal ) வேண்டியுள்ளதால் , அதற்கான காப்பீட்டுத் தொகை ரூ. 34,839 /– ஐ பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : 1) மேற்காணும் செலவினங்களை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் .<br>2) பணியின் அவசரம், அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று அரசு அங்கீகரிக்க பெற்ற நிறுவனமான M/S UNITED INDIA INSURANCE COMPANY LIMITED நிறுவனத்திற்கு தொகை செலுத்திய அலுவலக நடவடிக்கையினை மன்றம் அங்கீகரிக்கலாம் .<br>ந.க.எண்.2096/2024/இ1'</td>
<td>தீர்மான எண்.66 : அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்;.5</td>
<td>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்– 19730/2024/ தி2 நாள்–19.03.2025 –தேதிய கடிதத்தில் நமக்கு நாமே திட்டம்–2024–2025– இல் கீழ்காணும் பணிகளுக்கு, கீழ்க்கண்ட நிதிப்பகிர்வின் படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br><br>
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீட்டுத் தொகை ரூ.லட்சத்தில்</th><th>அரசு மான்யத் தொகை ரூ.லட்சத்தில்</th><th>பொதுமக்கள் பங்களிப்பு தொகை ரூ.லட்சத்தில்</th></tr>
<tr><td>1.</td><td>அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபாதை மற்றும் இருசக்கர வாகனம் நிறுத்தம் அமைக்கும் பணி</td><td>8.40</td><td>5.60</td><td>2.80</td></tr>
<tr><td>2.</td><td>வார்டு எண்.8 மறைஞாயநல்லூர் மயானத்திற்கு கம்பிவேலி அமைக்கும் பணி</td><td>2.64</td><td>1.76</td><td>0.88</td></tr>
<tr><td></td><td></td><td>11.04</td><td>7.36</td><td>3.68</td></tr>
</table>
எனவே, மேற்கண்ட நிதிப்பகிர்வின் படி பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிவழங்கலாம்.<br>2) பணியின் அவசர , அவசியத்தினை கருத்தில் கொண்டு நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரிய நடவடிக்கையினை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண். 609/2025/இ1)</td>
<td>தீர்மான எண்.67 : அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

**பொருள் எண்;.6**

வேதாரண்யம் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் மற்றும் பள்ளிகள் மேம்பாட்டு திட்ட நிதியின் கீழ் இராஜாஜி பூங்கா அருகில் வணிக வளாக கட்டிடம் மற்றும் நகராட்சி பள்ளியில் உள்ள பழுதடைந்த, பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள கீழ்காணும் கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்தும் பணிக்கு 08.04.2025 அன்று ஏலம் விடப்பட்டதில் அதிகபட்ச ஏலத்தொகை கோரிய விவரம் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது .

| வ.எண் | இடிக்கப்பட உள்ள கட்டிடத்தின் அமைவிடம் | ஏலதாரர் பெயர் (திருவாளர்கள்) | அதிகபட்ச ஏலக் கேள்வி |
|---|---|---|---|
| 1 | வணிக வளாக கட்டிடம் – தரை தளம் | ஆ.குழந்தைவேலு, பண்ணின்நேர் மொழியாள்புரம், வேதாரண்யம். | 43,000/- |
| 2 | வணிக வளாக கட்டிடம் – முதல் தளம் | | |
| 3 | நகராட்சி நடுநிலைப்பள்ளி (முஸ்லீம்), மேற்கு வாசல் மூன்றாவது வகுப்பறை கட்டிடம், தோப்புத்துறை | கே.சுதாகர், கைலவனம்பேட்டை, வேதாரண்யம். | 16,500/- |
| 4 | நகராட்சி தொடக்கப்பள்ளி (இந்து) கிழக்கு வாசல் வகுப்பறை கட்டிடம், தோப்புத்துறை | கே.சுதாகர், கைலவனம்பேட்டை, வேதாரண்யம். | 15,500/- |

எனவே, அதிகபட்ச ஏலத்தொகை கோரிய ஏலதாரர்களின் ஏல கேள்வியினை ஏற்க அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1) மன்றம் பார்வையிட்டு ஒப்புதல் வழங்கலாம் .

2) பணியின் அவசர , அவசியத்தினை கருத்தில் கொண்டு நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கொண்ட அலுவலக நடவடிக்கையினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 1621/2025/இ1)

**தீர்மான எண்.68 : அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்;.7**

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் வேதாரண்யம் நகராட்சி பகுதியில் விழிப்புணர்வு பிரசுரங்கள் அச்சடித்து வழங்குதல், விளம்பர பதாதைகள் அமைத்தல் மற்றும் இதர அத்தியாவசிய பணி மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டதின்படி, மேற்படி பணியின் அவசரம், அவசியத்தை கருத்தில் கொண்டு, விலைப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டுள்ள விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும். ஒப்புதலுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ, எண். | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | தொகை (ரூ) |
|---|---|---|
| 1. | M/S Thivaha Flex printing & Sticker, Vedaranyam. | 88,500/- |
| 2. | M/S Sivahami Traders, Vedaranyam. | 1,25,150/- |
| 3. | M/S Lion Flex printing & Sticker, Vedaranyam | 1,14,500/- |

**தீர்மான எண்.69 : அனுமதிக்கப்பட்டது**

மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரித்ததில் வரிசை எண்–1 இல் உள்ள M/S Thivaha Flex printing & Sticker, Vedaranyam. நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளதனை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி, செலவினங்களை வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்
2. பணியின் அவசரம், அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள வரிசை எண் – 1 இல் M/S Thivaha Flex printing & Sticker, Vedaranyam என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிய அலுவலக நடவடிக்கையை மன்றம் அங்கீகரிக்கலாம்

(ந.க.எண். 1227/2024/இ1)

---

பொருள் எண்;.8

வேதாரண்யம் நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் (NNT) **–2024–2025** ன் கீழ் , கீழ்கண்ட பணிகளுக்கு **23.04.2025** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில், தயார் செய்யப்பட்ட ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் , ஒப்புதலுக்கும் .

| வ. | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ . (லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | அரசு பெண்கள் மேல் நிலைப்பள்ளியில் நடைபாதை மற்றும் இருசக்கர வாகன நிறுத்தம் அமைக்கும் பணி . | 8.40 | M/S இராம்கரண் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கருப்பம்புலம். | 0.11 % குறைவு |
| | | | திரு. டி.செங்குட்டுவன், ஆயக்காரன்புலம். | 0.24% அதிகம் |
| | வார்டுஎண்–8 மறைஞாயநல்லூர் மயானத்திற்கு கம்பிவேலி அமைக்கும் பணி . | 2.64 | திரு. டி.காளிமுத்து., கைலவணம்பேட்டை. | 0.14 % குறைவு |
| | | | திரு. டி.செங்குட்டுவன், ஆயக்காரன்புலம். | 1.26% அதிகம் |

அலுவலக குறிப்பு :

1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்த விகிதம் வழங்கியுள்ள ஒப்பந்த நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் ஏற்கலாம்

**தீர்மான எண் 70 : அங்கீகரிக்கப்பட்டது**

| | | |
|---|---|---|
| | 2. இப்பணியின் அவசரம் , அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கிய நடவடிக்கையை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>ந.க.எண். 609/2025/இ1 | |
| பொருள் எண்;.9 | வேதாரண்யம் நகராட்சிக்குட்பட்ட வார்டு 13, கீழமடவிளாகம் என்ற முகவரியில் சூர்யயோகி சுவாமி உமாசங்கர் புக் ஸ்டால் எனும் பெயரில் புத்தக்கடை நடத்தி வந்த திரு.என்.ஜி.நமச்சிவாயம் த/பெ.கோபால் என்பவர் 21.07.2022,அன்று இறந்து விட்டதன் காரணமாக அவர்பெயரில் நடத்தி வந்த சூர்யயோகி சுவாமி உமாசங்கர் புக் ஸ்டால் அவர் பெயரில் தொடர்ந்து நடத்திட இயலாமல் அவர்பெயரில் உள்ள தொழில்வரி 100/003/900052 நகராட்சியில் பதிவிலிருந்து நீக்கம் செய்திட மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>அ.கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>(867/2024/அ1) | தீர்மான எண்.71 : ஒப்புதல் வழங்கப்பட்டது |
| பொருள் எண்;.10 | வேதாரண்யம் நகராட்சிக்குட்பட்ட வார்டு 10, 36/5-மேலவீதி என்ற முகவரியில் ஸ்ரீ வெற்றி விநாயகா சில்க் ஹவுஸ் & ரெடிமேட்ஸ் எனும் பெயரில் ஜவுளிக்கடை நடத்தி வந்த திரு.எம்.கே.தெட்சிணாமூர்த்தி த/பெ.காளிமுத்து என்பவர் 06.04.2025 அன்று இறந்து விட்டதன் காரணமாக அவர்பெயரில் நடத்தி வந்த ஸ்ரீ வெற்றி விநாயகா சில்க் ஹவுஸ் ஷ ரெடிமேட்ஸ் அவர் பெயரில் உள்ள தொழில்வரி 100/010/900340 நகராட்சியில் பதிவிலிருந்து நீக்கம் செய்திட மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>அ.கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>(867/2024/அ1) | தீர்மான எண்.72 : ஒப்புதல் வழங்கப்பட்டது |
| பொருள் எண்;.11 | வேதாரண்யம் நகராட்சிக்குட்பட்ட வார்டு 18,42/12A-கைலவனம்பேட்டைதென்புறம் என்ற முகவரியில் ராஜா டிராக்டர் ஒர்க்ஸ் எனும் பெயரில் கடை நடத்தி வந்த திரு.எஸ்.நடராஜன் த/பெ.சுப்பையன் என்பவர் 27.03.2025 அன்று இறந்து விட்டதன் காரணமாக அவர்பெயரில் நடத்தி வந்த ராஜா டிராக்டர் ஒர்க்ஸ் அவர் பெயரில் தொடர்ந்து நடத்திட இயலாமல் அவர்பெயரில் உள்ள தொழில்வரி நகராட்சியில் பதிவிலிருந்து நீக்கம் செய்திட மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>அ.கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>(867/2024/அ1) | தீர்மான எண்.73 : ஒப்புதல் வழங்கப்பட்டது |
| பொருள் எண்.12 | வேதாரண்யம் நகராட்சிக்கு 2023-24ஆம் நிதியாண்டிற்கு ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறிஸ்துவ ஆதிதிராவிடர் ஈமச்சடங்கு மான்ய தொகை அரசினால் நிதி ஒதுக்கீடு எதுவும் வரப்பெறாததால் 01.04.2024 முதல் வரப்பெற்ற மனுக்களில் இந்த ஆண்டிற்கான ஈமச்சடங்கு மானியத்தொகை அரசிடமிருந்து வரும் வரை பெறப்படும் விண்ணப்பங்களுக்கு ஈமச்சடங்கு மானியத்தொகை வழங்கிட ஏதுவாக ரூ.1,50,000/-ஐ நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிட மன்றம் தனது சாதாரணக்கூட்ட தீர்மானம் எண்.177/நாள்.21.11.2024-ன்படி அனுமதி அளித்தது. தற்சமயம் அத்தொகை முழுவதும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு விட்டதால், தற்சமயம் ஈமச்சடங்கு மானியத்தொகை வழங்கிடக்கோரி மேலும் மனுக்கள் வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து, உத்தேசமாக ரூ.1,00,000/-ஐ | தீர்மான எண்.74 : அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும், அரசிடமிருந்து ஈமச்சடங்கு மானியத்தொகை வரப்பெற்றதும் நகராட்சி கணக்கில் ஈடுசெய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.2396/2023 எச்.1) | |
| பொருள் எண்.13 | துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், நாகப்பட்டினம் அவர்களது நேர்முக கடிதம் ந.க.எண்.1313/அ5 2023 நாள்.02.08.2023-ல் நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் நகராட்சி பகுதியில் 24 டெங்கு களப்பணியாளர்கள் டெங்கு நோய்த்தடுப்பு பணிக்கு அமர்த்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து 26.12.2024 அன்று E-Tender மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு தகுதி வாய்ந்த ஒப்பந்த நிறுவனமான ‘‘சன் காண்ட்ராக்டர், வேதாரண்யம்’’ என்ற நிறுவனத்திற்கு ஜனவரி-2025 முதல் ஏப்ரல்-2025 முடிய டெங்குபுழு ஒழிப்பு பணி மேற்கொள்ள மன்ற தீர்மானம் எண்.9/நாள்.30.01.2025-ன்படி 06.01.2025 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டது. ஒப்பந்தக்காலம் ஏப்ரல்-2025 மாதத்துடன் முடிவடைவதால், புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள கால அவகாசம் தேவைப்படுவதாலும் டெங்கு தடுப்பு பணிகள் அத்தியாவசித்தை கருத்தில் கொண்டு மேற்படி ‘‘சன் காண்ட்ராக்டர், வேதாரண்யம்’’ என்ற நிறுவனத்திற்கு 06.01.2025 அன்று வழங்கப்பட்ட உத்தரவினை மே-2025ம் மாதம் முதல் மேலும் மூன்று மாத காலத்திற்கு நீட்டித்து வழங்கிடவும், அப்பணிக்கு ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.14.00 லட்சத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: 1) 06.01.2025 அன்று வழங்கிய வேலை உத்தரவினை மேலும் மூன்று மாதங்கள் நீட்டிக்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>2) மேற்படி டெங்கு தடுப்பு பணிகளுக்கு ஆகும் செலவினம் ரூ.14.00 இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.1441/2023 எச்.1) | **தீர்மான எண்.75 : அனுமதிக்கப்பட்டது** |
| பொருள் எண்.14 | துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், நாகப்பட்டினம் அவர்களது நேர்முக கடிதம் ந.க.எண்.1313/அ5 2023 நாள்.02.08.2023-ல் நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் நகராட்சி பகுதியில் 24 டெங்கு களப்பணியாளர்கள் டெங்கு நோய்த்தடுப்பு பணிக்கு அமர்த்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி நகர்மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு தொடர்ந்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனை தொடர்ந்து வேதாரண்யம் நகராட்சியில் வார்டு எண்.1 முதல் 21 முடிய உள்ள அனைத்து வார்டுகளிலும் 24 எண்ணிக்கை பணியாளர்களை கொண்டு ஆகஸ்ட்-2025 முதல் நவம்பர்-2025 முடிய நான்கு மாதங்களுக்கு டெங்கு நோய் தடுப்பு பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரிடவும், அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.19.60 இலட்சத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: 1) ஆகஸ்ட்-2025 முதல் நவம்பர்-2025 முடிய புதிய ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்படி பணிக்கு ஆகும் செலவினம் ரூ.19.60 இலட்சத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.828/2025 எச்.1) | **தீர்மான எண்.76 : அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td>பொருள் எண்.15</td>
<td>
வேதாரண்யம் நகராட்சியில் பொதுசுகாதார கழிவுநீர் வாகனம் எண்.TN51H7443-க்கு 4'' ஒஸ் மற்றும் அது தொடர்பான இதர பொருட்கள் சப்ளை செய்யும்பணி ரூ.0.60 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 17.04.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th rowspan="2">வ.எ.</th><th rowspan="2">பணியின் பெயர்</th><th rowspan="2">மதிப்பீட்டுத் தொகை ரூ.</th><th colspan="2">ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th></tr>
<tr><th>திரு.த. காளிமுத்து, கைலவனம்பேட்டை</th><th>திரு.டி. செங்குட்டுவன், ஆயக்காரன்புலம்-2</th></tr>
<tr><td>1</td><td>பொதுசுகாதார கழிவுநீர் வாகனம் எண்.TN51H7443-க்கு 4'' ஒஸ் மற்றும் அது தொடர்பான இதர பொருட்கள் சப்ளை செய்யும்பணி</td><td>60,000</td><td>59,500/-</td><td>61,200/-</td></tr>
</table>
மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தக்காரா் திரு. த. காளிமுத்து, கைலவனம்பேட்டை என்பவரது ஒப்பந்த விலை விகிதம் குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அவருக்கு வேலை உத்தரவு வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. பொதுசுகாதாரப்பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ''திரு. த. காளிமுத்து, கைலவனம்பேட்டை'' என்ற ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கிய அலுவலக நடவடிக்கையினை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>
(ந.க.எண்.175/2025 எச்.1)
</td>
<td>தீர்மான எண்.77 : அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்.16</td>
<td>
துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், நாகப்பட்டினம் அவர்களது நேர்முக கடிதம் ந.க.எண்.1313/அ5 2023 நாள்.02.08.2023-ல் நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் நகராட்சி பகுதியில் 24 டெங்கு களப்பணியாளர்கள் டெங்கு நோய்த்தடுப்பு பணிக்கு அமர்த்திட அறிவுறுத்தப்பட்டுள்ளதை தொடர்ந்து வேதாரண்யம் நகராட்சியில் வார்டு எண்.1 முதல் 21 முடிய உள்ள அனைத்து வார்டுகளிலும் 24 எண்ணிக்கை பணியாளர்களை கொண்டு டெங்கு நோய் தடுப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அப்பணியினை சர்வே செய்வதற்கு டெங்கு கணக்கெடுப்பு படிவம் அச்சடிக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது. இப்பணிக்கு உத்தேச செலவினம் ரூ.50,000 ஆகும் என்பதால் இத்தொகையினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு: பொது சுகாதாரப்பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு மேற்படி செலவினத்தினை நகராட்சி பொதுநிதியின்கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
(ந.க.எண்.829/2025 எச்.1)
</td>
<td>தீர்மான எண்.78 : அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td>பொருள் எண்.17</td><td>வேதாரண்யம் நகராட்சியின் பொதுசுதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மைப்பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் கழிவுநீர் அகற்றும் வாகனம் எண்.TN-51AT-8871-ற்கு GPS device பொருத்திட தகுதியான நிறுவனங்களிடமிருந்து 11.03.2025 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br><br>
<table>
<tr><th>வ.எ.</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>P.M. Enterprises,மதுரை</td><td>7350/- with GST 5%</td></tr>
<tr><td>2.</td><td>JO Infocom,மதுரை</td><td>7035/- with GST 5%</td></tr>
<tr><td>3.</td><td>திரவியம் Info Tech, மதுரை</td><td>8500/- with GST 5%</td></tr>
</table><br>
மேற்கண்ட நிறுவனங்களில் JO Infocom, மதுரை நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் அந்நிறுவனத்தின் விலைப்புள்ளி ஏற்று வேலை உத்தரவு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
(ந.க.எண்.382/2025 எச்.1)</td><td>தீர்மான எண்.79:<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>பொருள் எண்.18</td><td>வேதாரண்யம் நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் பொதுசுகாதார இலகுரக வாகனம் எண்.TN-51AS-4021-ற்கு ஆண்டு தகுதிசான்று 27.06.2025 உடன் முடிவடைவதால் தொடர்ந்து வாகனம் இயக்கிட ஆண்டு தகுதி சான்று பெற வேண்டியது மிகவும் அவசியமாகிறது. இப்பணி மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.30,000/-ம் ஆகும். மேலும் இவ்வாகனத்தின் காப்பீட்டுக்காலம் 19.06.2025 உடன் முடிவடைவதால் 20.06.2025 முதல் ஓராண்டிற்கு காப்பீடு செய்ய வேண்டியது அவசியமாகிறது. இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.22,000/-ம் ஆகும். எனவே மேற்படி வாகனத்தின் தகுதிச்சான்று மற்றும் செலுத்த வேண்டிய காப்பீட்டுத்தொகையினையும் சேர்த்து தொகை ரூ.52,000/-ம் ஆகும். எனவே இச்செலவினத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>
(ந.க.எண்.789/2025 எச்1.)</td><td>தீர்மான எண்.80:<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>பொருள் எண்.19</td><td>வேதாரண்யம் நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் பொதுசுகாதார இலகுரக வாகனம் எண்.TN-51AS-4020-ற்கு ஆண்டு தகுதிசான்று 27.06.2025 உடன் முடிவடைவதால் தொடர்ந்து வாகனம் இயக்கிட ஆண்டு தகுதி சான்று பெற வேண்டியது மிகவும் அவசியமாகிறது. இப்பணி மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.30,000/-ம் ஆகும். மேலும் இவ்வாகனத்தின் காப்பீட்டுக்காலம் 19.06.2025 உடன் முடிவடைவதால் 20.06.2025 முதல் ஓராண்டிற்கு காப்பீடு செய்ய வேண்டியது அவசியமாகிறது. இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.22,000/-ம் ஆகும். எனவே மேற்படி வாகனத்தின் தகுதிச்சான்று மற்றும் செலுத்த வேண்டிய காப்பீட்டுத்தொகையினையும் சேர்த்து தொகை ரூ.52,000/-ம் ஆகும். எனவே இச்செலவினத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>
(ந.க.எண்.788/2025 எச்1.)</td><td>தீர்மான எண்.81:<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

**பொருள் எண்.20**

வேதாரண்யம் நகராட்சிக்கு சொந்தமான 5 எண்ணிக்கை பூங்காக்களை தினசரி துாய்மை செய்து செடிகளை பராமரிக்கும்பணி மேற்கொள்ளவும் மற்றும் நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிவறைகளில் தினசரி துாய்மைப்பணி மேற்கொள்ளவும் 9 எண்ணிக்கை துாய்மைப்பணியாளர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகிறது. இப்பணியினை மேற்கொள்ள 6 மாதங்களுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சம் ஆகும் என்பதால் இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும், இப்பணியினை இணையதளத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான செலவினத்தொகையினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.893/2025 எச்.1)

**தீர்மான எண்.82: அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.21**

வேதாரண்யம் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற திட்டம், சிறப்பு திட்டம் மற்றும் நகர்புற சாலைகள் மேம்பாட்டு –2025–2026ன் கீழ் சாலை மேம்பாட்டு செய்யும் பணிகள் , மேற்கொள்ள 13.12.2024 அன்று E Tender மூலம் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதி உறை )Technical Bid)–ஐ கூர்ந்தாய்வு செய்ததில் இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஆவணங்கள் சரியாக உள்ள நிலையில் 29.04.2025 அன்று )Price Bid) விலை உறை திறக்கப்பட்டு அதன் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது.

| SL. NO | NAME OF WORK | ESTIMATE AMOUNT | Contractor Name | Percentage |
|---|---|---|---|---|
| | **Kalaignar Nagarpura Mempattu Thittiam - 2025 - 2026** | | | |
| 1 | Conversion of Earthern road to BT Surface Road at 100004R051 - Arcottuthurai Beach road to Nalukal Mandabam, 100013R258 - Ayyapillai Road, 100016R266 - Rajalikadu mayana Salai, 100020R279 - Melakadu to Muthupettai Salai link road in Vedaranyam Municipality. | 164.00 | M/s Shree Anantha Kamatchi Contractors, Andarkadu | -0.15% Less |
| | | | R.Rajendran, Ayakkaranpulam | 0.64% More |
| 2 | Conversion of Earthern road to BT Surface Road at 100006R236 - Vedamirtha Lake to kallikattan adaippu road, 100008R246 - Maraiganayanallur Thoorawpathyamman kovil Road Veethi, 100008R247 - Vandurai mariyamman koivl East street, 100008R245 - Maraiganayanallur Thoorawpathyamman kovil Road, 100020R281 - Kollaikadu Road to Keezha Arumugakattalai link road, in Vedaranyam Municipality. | 136.00 | M/s Aakash Construction, Panchanathikulam | -0.16% Less |
| | | | M/s Jeeve Construction, Nagakudaiyan | 0.83% More |
| 3 | Conversion of Earthern road to BT Surface Road at 100021R091 - Maniyantheevu Seashore Road, 100021R090 - Maniyantheevu to Sthubi road, 100009R253 - V.O.C Nagar to Archarakattalai link road, 100006R203 - Thetheri East side May ana Salai, in Vedaranyam Municipality. | 200.00 | M/s Jeeve Construction, Nagakudaiyan | - 0.10% Less |
| | | | M/s Aakash Construction, Panchanathikulam | 0.90% More |
| | **Total** | **500.00** | | |
| | **Nagarpura Salai Mempattu Thittiam - 2025 - 2026** | | | |

**தீர்மான எண்.83 : அங்கீகரிக்கப்பட்டது**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | Renewal of BT with patches at Kuppaiyan kadu 100005R023, Melatheru to Kollitheevu River Bridge (100004R224) Navy Camp Road (100004R050) Ramakrishnapuram main road (100011R056)Fire service To Sannathi Link Road(100013R074) Puthukulatheru (100014S023) Kuttachi kadu mayana salai (100021S027) Paktharkulam Mariyamman Kovil To Vembathevankadu Road (100019R117) Super Bassar Road(100010S041) TTP Road to payathavarankadu Angadi Road (100016R145) Vembathevankadu Main Road ( Upto Melachathirakattalai Road) (100017R288) Gandhi Nagar West Side Cross Road (100009R171) Ravuthankulam to Melachathirakattalai Road (100007R239) NALLA THANNER KULA THERU (100001R216) in Vedaranyam Municipality. | 266.00 | R.Rajendran, Ayakkaranpulam | -0.11 Less |
| | | | M/s Shree Anantha Kamatchi Contractors, Andarkadu | 1.28% More |
| 2 | Renewal of CC Road Perumal at Narandichetti kula theru-100005S001,VSV Nagar street-100006S060, in Vedaranyam Municipality. | 11.00 | M/s Ramkaran Construction, Karuppampulam | - 0.10% Less |
| | | | T.Senkuttuvan, Ayakkaranpulam | 0.19% More |
| | **Total** | **277.00** | | |

**Special Fund 2025 - 2026**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | Conversion of Earthern road to CC Road at 100005S059 - South street Veeran koil lane 2, 100017S072 - Sarvakattalai Community hall Road, 100018S034 - Mela Panninermozhiyalpuram Road, 100018S047 - Utchakattalai cross Road ( Vembathevankadu Local Well Road ) | 56.00 | S.Valli, Vedaranyam | -0.11% Less |
| | | | M/s Ramkaran Construction, Karuppampulam | 0.27% More |
| 2 | Conversion of Earthern road to Paver Block Road at 100010L009 - Nerhu Nagar East side Road, 100012S066 - Pattu Store East side lane, 100016L010 - Angalamman kovil East side cross north side lane, 100006L005 - Nallathankadu Veeran kovil opposite Road, 100006S051 - Valliyammai salai north side Second Cross Street, 100020S076 - Mathakoil Kuyavankulam West side Road, 100020S075 - Mathakoil Kuyavankulam East side Road in Vedaranyam Municipality. | 87.00 | M/s Ramkaran Construction, Karuppampulam | -0.13% Less |
| | | | S.Valli, Vedaranyam | 0.43% More |
| | **Total** | **143.00** | | |

மேற்காணும் ஒப்புநோக்கு பட்டியலின்படி மதிப்பீட்டைவிட குறைவாக அளித்துள்ள ஒப்பந்தாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்ற நடவடிக்கையினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு– 1. மன்றம் பார்வையிட்டு பதிவுசெய்யலாம் .

2 இப்பணியின் அவசரம்அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர் . நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கிய நடவடிக்கையை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.747/2025/இ1**

**பொருள் எண்.22**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் உத்தரவின்படி , இந்நகர்பகுதியில் உள்ள சாலைகளை , தார்சாலை , சிமெண்ட் சாலை , பெவர் பிளாக் சாலை மற்றும் மண்சாலை என வகைபடுத்தி சாலை பதிவேட்டில் (ROAD LEDGER )பதிவு செய்திட அறிவுறுத்தப்பட்டு , நகர்பகுதியில் உள்ள சாலைகளை online– மூலம் சாலை பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்ட நிலையில்,

இந்நகராட்சி பகுதியில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட மனை பகுதிகள், மற்றும் குடியிருப்பு பகுதியில் உள்ள புதிய சாலைகள் மற்றும் இணைப்பு சாலைகளை (Connecting Road) புதிதாக சாலை பதிவேட்டில் பதிவேற்றம் செய்யவேண்டியது அவசியமாகிறது. எனவே கீழ்காணும் சாலைகளை பதிவேற்றம் செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| Si.no | New Ward no | New Uni code | Name or Nomenclature | Latitude & Longitude | | Category | Length in 'm' | Total Width |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | Start Point | End Point | Road® Street(S) | | |
| 1 | 6 | 100006S098 | Nallathan kadu South side Muthu Mariyamman koil Street | 10.3934<br>79.8329 | 10.3922<br>79.8325 | S | 150.00 | 3.80 |
| 2 | 16 | 100016R322 | Swasthik Nagar West side Road | 10.3742<br>79.8380 | 10.3751<br>79.8381 | R | 170.00 | 4.50 |
| 3 | 17 | 100017R323 | Thambirankudikadu West Side Road | 10.3697<br>79.8190 | 10.3699<br>79.8182 | R | 85.00 | 4.40 |
| 4 | 18 | 100018R324 | Chettiyakadu to Kailavanampettai School Road | 10.3643<br>79.8145 | 10.3617<br>79.8137 | R | 308.00 | 4.50 |
| 5 | 18 | 100018R325 | Kailavanampettai Urkula Mariyamman kovil North Side Road | 10.3611<br>79.8127 | 10.3610<br>79.8134 | R | 100.00 | 4.60 |
| 6 | 18 | 100018R326 | Velappankadu to Muthupettai Salai West side Road | 10.3552<br>79.8142 | 10.3553<br>79.8135 | R | 85.00 | 4.40 |
| 7 | 18 | 100018L021 | Kailavanampettai Chettiyakadu East Side Lane | 10.3674<br>79.8108 | 10.3678<br>79.8113 | L | 110.00 | 2.90 |
| | | | TOTAL | | | | 1008.00 | |

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

(**ந.க.எண்.**1450/2024/E1)

**தீர்மான எண் 84 : அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.23**

வேதாரண்யம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 11 ல் இராமகிருஷ்ணாபுரம் பள்ளியில் உள்ள கலையரங்கத்திற்கு கைப்பிடி சுற்றுசுவர், மின் விளக்கு மற்றும் இதரப் பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் வார்டு எண்– 1 ல் தோப்புத்துறை இந்து பள்ளியில் புதிய பள்ளி கட்டிடம் கட்டுவதால் பழைய கலையரங்கத்தை இடித்துவிட்டு புதிய கலையரங்கம் கட்டுதல் ஆகிய பணிகள் செய்வதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..

அலுவலக குறிப்பு : நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்–881/2025/இ1

**தீர்மான எண் 85 : அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.24**

வேதாரண்யம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்– 16 , RDR Nagar வார்டு எண் –20 காளியம்மன் கோவில் தெரு, வார்டு எண் –6 நல்லத்தான்காடு வார்டு எண் 18 கைலவனம்பேட்டை ஆகிய பகுதிகளில் கொள்ளிடம் வீட்டு குடிநீர் இணைப்பு வழங்க புதிதாக பகிர்மான குழாய் விஸ்தரிப்பு செய்ய நகர்மன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் வேண்டு கோளின்படி நகர்மன்ற தலைவர் அவர்களின் ஆய்வின் போது வழங்கிய அறிவுரையின்படி இடம் ஆய்வு செய்யப்பட்டு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ3.00 இலட்சத்திற்கு இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மான எண் 86 : அனுமதி வழங்கப்பட்டது**

| | | |
|---|---|---|
| | அலுவலக குறிப்பு : மேற்படி பணியினை நகராட்சி குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ள மன்றம் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண்–882/2025/இ1 | |

ஒம்/–
மா.மீ.புகழேந்தி
நகர்மன்றத் தலைவர்

**வேதாரண்யம் நகராட்சியின் 2025-ம் ஆண்டு மே மாதம் 30ம் தேதி வெள்ளிகிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.**
**முன்னிலை திரு மா.மீ.புகழேந்தி,**

**பொருள் எண்;.1**

வேதாரண்யம் நகராட்சி, நகர்மன்றத்தலைவர் அவர்களின் அலுவலக பயன்பாட்டு ஸ்கார்பியோ வாகனம் எண் - TN51AT 4748-ன் வாகனத்தின் இரண்டாம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.10,000/-திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு :
1. மேற்காணும் செலவினங்களை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. மகேந்திரா நிறுவனத்தால் அங்கீகரிக்க பெற்ற நிறுவனமான SHIVA AUTOMOBILES PVT LTD மூலம் பணி மேற்கொள்ளும் அலுவலக நடவடிக்கை மற்றும் தொகை வழங்கிய நடவடிக்கையினை மன்றம் அங்கீகரிக்கலாம் .

(**ந.க. எண்**. 909/25/இ1 )

**தீர்மான எண்.87 : அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்;.2**

வேதாரண்யம் நகராட்சியில் 15–வது மத்திய நிதிக்குழு மான்யம் 2022–23 & 2024–25 (Un Tied) ன் கீழ் ரூ. 32.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு –13 , சன்னதி தெருவில் உள்ள நவீன எரிவாயு தகனமேடையை பராமரிப்பு செய்யும் பணிக்கு 12.05.2025 அன்று E Tender மூலம் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எ. | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ) | ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூ) | மதிப்பீட்டின் படி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | M/S M.H.T Engineering, Chennai–23 | 30,95,159.00 | 30,94,585.00 | 0.019% குறைவு |
| 2 | M/S Yes Yes Engineering, Chennai–23 | | 30,95,158.00 | 0.0003 % அதிகம் |

மேற்காணும் ஒப்புநோக்கு பட்டியலின்படி மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்ற நடவடிக்கையினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு–
1 மன்றம் பார்வையிட்டு பதிவுசெய்யலாம்
2 இப்பணியின் அவசரம்அவசியம் கருதி மன்றத்தின் . அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கிய நடவடிக்கையை மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மான எண்.88 : அங்கீகரிக்கப்பட்டது**

| | | |
|---|---|---|
| | **ந.க.எண். 750/2025/இ1** | |
| பொருள் எண்;.3 | வேதாரண்யம் நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் –2025–2026 ன் கீழ் வார்டு –01 , மாரியம்மன் கோவில் நீர் நிலை மேம்பாடு செய்யும் பணிக்கு 10.05.2025 அன்று E–Tender மூலம் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது. | **தீர்மான எண்.89 : அங்கீகரிக்கப்பட்டது** |

| வ.எ. | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ) | ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூ) | மதிப்பீட்டின் படி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | திரு. டி.செங்குட்டுவன், ஆயக்காரன்புலம். | 41,01,004.65 | 40,96,288.96 | 0.115% குறைவு |
| 2 | திரு. டி.காளிமுத்து, கைலவனம்பேட்டை. | | 41,17,621.90 | 0.405 % அதிகம் |

மேற்காணும் ஒப்புநோக்கு பட்டியலின்படி மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்ற நடவடிக்கையினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு– 1 மன்றம் பார்வையிட்டு பதிவுசெய்யலாம்

2 இப்பணியின் அவசரம்அவசியம் கருதி மன்றத்தின் . அவர்களின் அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்ற தலைவர் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கிய நடவடிக்கையை மன்றம் அங்கீகரிக்கலாம்

**ந.க.எண். 748 /2025/இ1**

| | | |
|---|---|---|
| பொருள் எண்;.4 | நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை அவர்களின் ந.க.எண்–14121/2025/எம்2 14.05.2025 ம் தேதிய கடிதத்தில் கீழ் கண்டவாறு திட்டப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்ததற்கான விளம்பர கட்டணத் தொகை நிலுவை விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது, கீழ்காணும் தொகை செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | **தீர்மான எண்.90 : அனுமதிக்கப்பட்டது** |

| S.No | Work Name | Bill No | Invoice Date | Bill Amount |
|---|---|---|---|---|

| | | |
|---|---|---|
| | | 1 | Construction of Special Shelter Building for Urban Homeless at Government Hospital Campus | 232 | 03.01.2022 | 6,187/- |<br><br>அலுவலக குறிப்பு. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**ந.க.எண். 314 /2020/இ1** | |
| பொருள் எண்;.5 | நகராட்சி பொதுநிதி **2025-2026** ன்கீழ் அலுவலக பணிக்கு தேவையான பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் விநியோகம் செய்யும் பணி மேற்கொள்ள **16.05.2025**அன்று E-Tender மூலம் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.91 : அங்கீகரிக்கப்பட்டது** |

| வ.எண். | விவரம் | M/s உதயம் காண்ட்ராக்டர், வேதாரண்யம் நபர் ஒன்றுக்கு | M/s சன் காண்ட்ராக்டர், வேதாரண்யம் நபர் ஒன்றுக்கு |
|---|---|---|---|
| 1. | புள்ளி விவர குறிப்பாளர் | **723.00** | **725.00** |
| 2. | தொழில்நுட்ப உதவியாளர் | **825.00** | **830.00** |
| 3. | மேல்நிலை தொட்டி இயக்குபவர் | **723.00** | **725.00** |
| 4. | தட்டச்சர் | **825.00** | **830.00** |
| 5. | ஓட்டுநர் | **723.00** | **725.00** |

அலுவலக குறிப்பு

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ஒப்பந்தவிகிதம் வழங்கியுள்ள M/s உதயம் காண்ட்ராக்டர், வேதாரண்யம் ஒப்பந்த நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

2. இப்பணியின் அவசரம், அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கிய நடவடிக்கையை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க. எண். 1823/24/இ1)**

| | | |
|---|---|---|
| பொருள் எண்;.6 | நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 21335/2021/M2 – நாள்.06.03.2025 –ம் தேதிய கடிதத்தில் படி தமிழ்நாடு சட்டமன்ற கூட்டத்தொடரின் | **தீர்மான எண்.92 : அனுமதி** |

(வரவு, செலவு கணக்கு தாக்கல் செய்தல்) நிகழ்வினை அனைத்து தரப்பினரும் அறியும் வகையில் நகராட்சி பகுதிகளில் LED திரை அமைத்து அனைத்து பொதுமக்களும் அறிந்து கொள்ளும் வகையில் உரிய ஏற்பாடு செய்திடவும் மற்றும் இதர அத்தியாவசிய பணி மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டதின்படி, மேற்படி பணியின் அவசரம், அவசியத்தை கருத்தில் கொண்டு, விலைப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்ட விவரப்படி பெறப்பட்டுள்ள விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும்ஒப்புதலுக்கும் . வைக்கப்பட்டுள்ளது.

**வழங்கப்பட்டது**

| வ, எண். | ஒப்பந்த்தாரர் பெயர் | தொகை (ரூ) |
|---|---|---|
| 1. | Mr. T.Senkuttuvan, Contractor, Ayakkaranpulam | 27,450 |
| 2. | Mr. T.Kalimuthu, Contractor, Vedaranyam | 24,750 |
| 3. | Mr. S.Valli, Contractor, Vedaranyaam | 28,750 |

மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரித்ததில் வரிசை எண்–2 இல் உள்ள Mr. T.Kalimuthu, Vedaranyam என்ற ஒப்பந்தாரரின் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளதனை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :
1. மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி, செலவினங்களை வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்
2. பணியின் அவசரம், அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள வரிசை எண் – 2 இல் Mr. T.Kalimuthu, Vedaranyam என்ற ஒப்பந்தாரக்கு பணி உத்தரவு வழங்கிய அலுவலக நடவடிக்கையை மன்றம் அங்கீகரிக்கலாம்

(ந.க.எண். 523/2025/இ1)

---

பொருள் எண்;.7

வேதாரண்யம் நகராட்சி 2025–26ம் ஆண்டின் அங்கீகரிக்கப்பட்ட மூன்றாண்டு குத்தகை இனமான வெட்டுக்குளம் மேல்பாகத்தில் வேன் நிறுத்தும் இடத்தில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமைக்கு பொது ஏல மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 20.06.2023, 18.07.2023. 16.02.2024, 05.03.2024. 18.07.2024, 17.10.2024. 16.01.2025. 11.03.2025 ஆகிய தினங்களில் பொது ஏல மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் ஏலம் கோர எவரும் முன்வரவில்லை அதன் காரணமாக மேற்படி இனத்தில் துறை சார்ந்த வசூல் பணிபார்க்கப்பட்டது. கடைசியாக 15.05.2025 அன்று பொது ஏலம் கோரப்பட்டதில் திரு.கிருஷ்ணன் த/பெ செல்வம் என்பவர் உயர்ந்தபட்ச ஏல கேள்வி தொகை ரூ.13000/–க்கு உரிமம் கோரியுள்ளார். மேற்படி, இனத்திற்கு துறை சார்ந்த வசூல் பணியில் பணியாளரின் ஈடுபடும் மாத ஊதியம், கட்டண ரசீதுகள் பிரிண்டிங் மற்றும் இதர செலவினங்கள் ஏல

**தீர்மான எண்.93 : அனுமதிக்கப்பட்டது**

| | | |
|---|---|---|
| | உரிமை தொகையைவிட கூடுதலாக செலவிடபடுவதால், 15.05.2025ல் கோரப்பட்ட உயர்ந்தபட்ச ஏல உரிமை தொகையினை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br><br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்<br><br>**ந.க.எண். 201/2025/அ2** | |
| பொருள் எண்;.8 | அரசாணை (நிலை) எண்.43 சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை நாள்.27.07.2022ன் படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.17404/2022/எம்1 நாள்.02.11.2022ல் தரப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி வேதாரண்யம் நகராட்சியில் தமிழ்நாடு முதலமைச்சரின் காலை உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் 10 எண்ணிக்கையிலான பள்ளிகளுக்கு காலை உணவு வழங்கும் திட்டம் செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சிக்குட்பட்ட 10 பள்ளிகளில் உணவு பரிமாறும் பணியாளர்களுக்கு அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளே மதிப்பூதியம் வழங்கிட வேண்டுமென்று திட்ட செயலாக்க வழிகாட்டு நெறிமுறைகள் தரப்பட்டுள்ளது. எனவே, தலா ஒரு பணியாளருக்கு மாதம் ரூ.1500/– வீதம் 10 பள்ளிகளில் உணவு பரிமாறும் 11 பணியாளர்களுக்கு மாதம் ரூ.16500/– வீதம் 01.04.2025 முதல் 31.03.2026 வரை ஒரு ஆண்டிற்காகும் உத்தேச செலவினம் ரூ.198000/–ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>(ந.க. எண்.0484/2023/இ2) | **தீர்மான எண்.94 : அனுமதிக்கப்பட்டது** |
| பொருள் எண்;.9 | அரசாணை (நிலை) எண்.43 சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை நாள்.27.07.2022ன் படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க. எண்.17404/2022/எம்1 நாள்.02.11.2022ல் தரப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி வேதாரண்யம் நகராட்சியில் தமிழ்நாடு முதலமைச்சரின் காலை உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் 10 எண்ணிக்கையிலான பள்ளிகளுக்கு காலை உணவு வழங்கும் திட்டம் செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சிக்குட்பட்ட 10 பள்ளிகளில் உணவு பரிமாறும் பணியாளர்களுக்கு அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளே மதிப்பூதியம் வழங்கிட வேண்டுமென்று திட்ட செயலாக்க வழிகாட்டு நெறிமுறைகள் தரப்பட்டுள்ளது. எனவே, தலா ஒரு பணியாளருக்கு மாதம் ரூ.1500/– வீதம் 10 பள்ளிகளில் உணவு பரிமாறும் 11 பணியாளர் களுக்கு மாதம் ரூ.16500/– வீதம் 01.10.2024 முதல் 31.03.2025 வரை ஆறுமாத காலத்திற்கு நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று ஊதியம் வழங்கப்பட்ட வகையில் ரூ.99000/– நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதற்கு மன்ற பின்னேற்பு அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியில் மேற்கொண்டதற்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.<br><br>(ந.க. எண்.0484/2023/இ2) | **தீர்மான எண்.95 : பின்னேற்பு வழங்கப்பட்டது** |

<table>
<tr><td></td><td></td><td></td></tr>
<tr><td>பொருள் எண்;.10</td><td>வேதாரண்யம் நகராட்சிக்குட்ப்பட் பள்ளிகளுக்கு நகராட்சியின் மூலம் 2025–26ம் ஆண்டு கல்வி பயலும் மாணக்கர்களின் அறிவு திறனையும், வாசிப்பு திறனையும் மேம்படுத்தும் வகையில் மேற்படி கீழ்கண்ட நகராட்சி பள்ளிகளுக்கு நாள் ஒன்றுக்கு, 1 பிரதிகள் தினகரன் நாளிதழ் (சனி,ஞாயிறு நீங்கலாக) வழங்குவதற்கு ஆகும் செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ.எ.</th><th>பள்ளிகள் விவரம்</th></tr>
<tr><td>1</td><td>நகராட்சி தொடக்கப்பள்ளி (இந்து) தோப்புத்துறை</td></tr>
<tr><td>2</td><td>நகராட்சி நடுநிலைப்பள்ளி (முஸ்லீம்) தோப்புத்துறை</td></tr>
<tr><td>3</td><td>நகராட்சி தொடக்கப்பள்ளி, ஆறுகாட்டுத்துறை</td></tr>
<tr><td>4</td><td>நகராட்சி நடுநிலைப்பள்ளி மூன்றாம்தெரு</td></tr>
<tr><td>5</td><td>நகராட்சி நடுநிலைப்பள்ளி கைலவனம்பேட்டை</td></tr>
<tr><td>6</td><td>நகராட்சி தொடக்கப்பள்ளி, வடமழைரஸ்தா</td></tr>
<tr><td>7</td><td>நகராட்சி தொடக்கப்பள்ளி, இராமகிருஷ்ணபுரம்</td></tr>
<tr><td>8</td><td>நகராட்சி தொடக்கப்பள்ளி, வேம்பதேவன்காடு</td></tr>
</table>
<br>அலுவலக குறிப்பு. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
<br>(ந.க. எண்.1187/2022/இ2)</td><td>தீர்மான எண்.96 : அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>பொருள் எண்;.11</td><td>வேதாரண்யம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவிற்கு தேவையான பிளிச்சிங் பவுடர், சுண்ணாம்பு, ஆசிட், கருப்பு பினாயில் மற்றும் தளவாடப்பொருட்களான ஜாடி, குப்பை அள்ளும் தகரம், அன்னக்கூடை மற்றும் சாலை சுத்தம் செய்திட பிரஷ் கட்டை ஆகிய பொருட்கள் ரூ.1.50 லட்சம் மதிப்பீட்டில் ‘‘தமிழ்நாடு சிறுதொழில்கள் மேம்பாட்டுக்கழகம், தஞ்சாவூர்’’ நிறுவனம் மூலம் வாங்கிட மன்றம் தனது சாதாரணக்கூட்ட தீர்மானம் எண்.36/நாள்.27.02.2025-ன்படி அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் மேற்கண்ட பொருட்கள் அந்நிறுவனத்தில் இல்லாத காரணத்தால் பொதுசுகாதாரப்பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு ‘‘திருவாரூர் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை, திருவாரூர்’’ நிறுவனத்தில் வாங்கப்பட்டது. அதற்கான பட்டியல் தொகை ரூ.1,43,625/-ஐ வழங்கிட கோரி பட்டியல் வரப்பெற்றது. எனவே மேற்படி பட்டியல் காசோலையாக திருவாரூர் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை, திருவாரூக்கு வழங்கிய நடவடிக்கைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<br>அலுவலக குறிப்பு: பொதுசுகாதாரப்பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு நகர்மன்றத்தலைவர் அவர்கள் முன்அனுமதி பெற்கு திருவாரூர் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை, திருவாரூர் நிறுவனத்திற்கு காசோலை வழங்கிய அலுவலக நடவடிக்கையினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
<br>(ந.க. எண்.381/2025/எச்1)</td><td>தீர்மான எண்.97 : அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| பொருள் எண்.12 | வேதாரண்யம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் புதிய கழிவுநீர் வாகனம் எண்.TN-51AT-8871-ற்கான இரண்டாவது பராமரிப்பு (Service) மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகிறது. இதே வாகனத்தின் முதல் பராமரிப்பு பணியினை மேற்கொண்ட நிறுவனமான GEO Tractors, திருவாரூர் மூலமாகவே மீண்டும் இரண்டாவது பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டியுள்ளதால், அதற்கான பராமரிப்புக்கட்டணம் தொகை ரூ.4110/- ஐ மேற்கண்ட நிறுவனத்திற்கு முன்பணமாக வழங்கினால் மட்டுமே வாகனம் பராமரிப்பு பணி மேற்கொள்ள இயலும் என்பதால் அத்தொகையினை காசோலையாக GEO Tractors, திருவாரூர் வழங்கிய அலுவலக நடவடிக்கைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: பொதுசுகாதாரப்பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு நகர்மன்றத்தலைவர் அவர்கள் முன்அனுமதி பெற்கு GEO Tractors, திருவாரூர் நிறுவனத்திற்கு காசோலை வழங்கிட மேற்கொள்ளும் அலுவலக நடவடிக்கையினை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க. எண்.382/2025/எச்1) | **தீர்மான எண்.98 : அங்கீகரிக்கப்பட்டது** |
| பொருள் எண்.13 | நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்–16390/2024/பிபிசி 27.05.2025 ம் தேதிய கடிதத்தில் தமிழ் நாடு சட்டமன்ற வரவு செலவு திட்டம் 2025–26–க்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான (மானியக் கோரிக்கை எண்.34) "நான்காண்டு சாதனை மலர் –புத்தகம் நகராட்சி நிர்வாக இயக்குநரகம் மூலம் அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் மேற்கொள்ளப்பட்ட திட்டபணிகள் மற்றும் சிறப்பான செயல்பாடுகள் குறித்து தயாரித்து வெளியிடப்பட்டது. மேற்காணும் சாதனைமலர் புத்தகம் அச்சிடப்பட்டு தயார் செய்யப்பட்டதற்கான செலவினப் பட்டியல் தொகை ரூ. 7,500/–ஐ (18 சதவீத GST உட்பட) சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு நகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்திட ஆணையிடப்பட்டுள்ளது . எனவே, மேற்படி தொகையினை செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு 1.பொது நிதியில் செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் . அனுமதிக்கலாம்<br>2.மேற்படி தொகையினை நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை அவர்களின் கணக்கில் செலுத்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்,<br>**ந.க.எண். 1099/2025/இ1** | **தீர்மான எண்.99 : அனுமதிக்கப்பட்டது** |
| பொருள் எண்.14 | நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்– 9732/2025/ SS2 02.05.2025 ம் தேதிய கடிதத்தில் SFC – 2025–2026 பள்ளி மேம்பாட்டு மான்யம் மூலதனநிதியின் கீழ் கீழ் காணும் அங்கன்வாடி மையத்தின் கட்டுமானம் மற்றும் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. | **தீர்மான எண்.100 : அனுமதிக்கப்பட்டது** |

| வ.எண் | SFC – 2025–2026 பள்ளி மேம்பாட்டு மானியம் மூலதனநிதி | மதிப்பீட்டுத் தொகை ரூ.(இலட்சத்தி |
|---|---|---|

| | | |
|---|---|---|
| | | ல்) |
| 1. | Reconstruction of Anganwadi (ICDS) Center at Ward no 05 Panaiyan Kadu in Vedaranyam Municipality. | 19.00 |

மேற்படி பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை அவர்களால் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நடவடிக்கையில் உள்ளது . இந்நிலையில் நாகப்பட்டினம் மாவட்டம் ஆட்சியர் அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதன் படி பிரதான் மந்திரி ஜன் விகாஸ் காரிய கிராம் யோஜனா (PMJVK) திட்டத்தின் 2024-2025 கீழ் 27.03.2025 அன்று நடைபெற்ற மாநில அளவிலான குழு கூட்டத்தில் வேதாரண்யம் நகராட்சி வார்டு எண்-5 பனையங்காடு பகுதியில் புதிதாக அங்கன்வாடி மையம் அமைப்பதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்ற விவரம் தெரிவிக்கப்பட்டது . எனவே, மேற்காணும் ஒரே பகுதியில் புதிதாக அங்கன்வாடி அமைக்க இரண்டு நிர்வாக அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளது.

PMJVK திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நிர்வாக அனுமதியை வேறு இடத்திற்கு மாற்ற இயலாது என்பதால் SFC - 2025-2026 பள்ளி மேம்பாட்டு மானியம் மூலதன நிதியின் கீழ் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நடவடிக்கையில் உள்ள பணியினை புதியதாக அங்கன்வாடி அவசியமாக தேவைப்படும் வார்டு எண்.21 மணியன்தீவு பகுதிக்கு மாற்றம் செய்து பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை அவர்களின் அனுமதி கோரி கடிதம் அனுப்ப மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண். 971/2025/இ1)

---

**பொருள் எண்.15**

மாவட்ட ஆட்சிதலைவர் , நாகப்பட்டினம் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்-8151/2025/ ஆ2 16.05.2025 ம் தேதிய கடிதத்தில் வேதாரண்யம் நகராட்சிக்கு பகுதியில் 2025-2026 ஆம் நிதியாண்டு-அயோத்தி தாசர் பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நகர ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேற்கொள்ள முன்மொழிவுகள் பெறப்பட்டது கீழ்காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி, நடவடிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது .

| வ.எ ண். | அயோத்தி தாசர் பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம் **2025-2026** | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | Providing Newely BT Road in Thulluvetti Ayyanar Kovil to Tsunami Nagar at AD Colony Burial Ground Road. | 45.00 |

**தீர்மான எண்.101 : ஒப்புதல் வழங்கப்பட்டது**

| | | |
|---|---|---|
| | அலுவலக குறிப்பு : மன்றம் பார்வையிட்டு ஒப்புதல் வழங்கலாம் .<br><br>(ந.க.எண். 1100/2025/இ1) | |
| பொருள் எண்.16 | **கசடுகழிவு மேலாண்மை துணை விதிகள்,**<br>தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022 (தமிழ்நாடு சட்டம் 35/2022) இன் அத்தியாயம் X–A, பிரிவு 199, அத்தியாயம் XI ஆல் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, **வேதாரண்யம்** நகராட்சி மன்ற அதிகார வரம்பிற்குள் அமைந்துள்ள கட்டிடங்களில் அமைக்கப்பட்டுள்ள கழிப்பறைகள் மற்றும் நச்சு தொட்டிகளின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பை ஒழுங்குபடுத்துவதற்காக பின்வரும் துணை விதிகளை உருவாக்குகிறது.<br><br>இந்த துணை விதிகள், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 இன் அத்தியாயம் XI– பகுதி IV ", 2019 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள்", அவ்வப்போது அரசாங்கத்தால் அறிவிக்கப்படும் பிற தொடர்புடைய விதிகள் மற்றும் உத்தரவுகளுடன் சேர்த்துப் படிக்கப்பட வேண்டும்.<br><br>**1. சுருக்கமான தலைப்பு, தொடக்கம் மற்றும் பொருந்தக்கூடிய தன்மை**<br><br>i. இந்த துணை விதிகள் **வேதாரண்யம்** நகராட்சிக்கான கசடுகழிவு மேலாண்மை துணைவிதிகள் என்று அழைக்கப்படும்.<br><br>iiஇந்த துணை விதிகள் **நாகப்பட்டிணம்** மாவட்டத்தின்அரசிதழில் அறிவிக்கப்பட்டு வெளியிடப்பட்டஅல்லது குறிப்பாக அறிவிக்கப்படும் பிற தேதியில் நடைமுறைக்கு வரும்.<br><br>iii. இந்த துணை விதிகள் அமலுக்கு வந்ததும், குடியிருப்பு, வணிக நிறுவன நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டாலும், **வேதாரண்யம்** நகராட்சியின் அதிகார வரம்பில் அமைந்துள்ள குளியலறைகள், கழுவும் பகுதிகள், கழிப்பறைகள் மற்றும் சிறுநீர் கழிப்பிடம் கொண்ட அனைத்து கட்டிடங்களுக்கும் பொருந்தும்.<br>**2. வரையறைகள்**<br>இந்த உப விதிகள் பத்தியிலுள்ள மேலும் தேவைப்படுகின்ற இனங்கள் மற்றும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவற்றிக்கிற்கான பொருள்கள் இங்கே விவரிக்கப்பட்டுள்ளன:<br><br>1. "**மேல்முறையீட்டு அமைப்பு**" என்பது அவ்வப்போது அறிவிக்கப்படும், நகர சுகாதாரக் குழு அல்லது வேறு ஏதேனும் சம்பந்தப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அமைப்பின் உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பைக் குறிக்கும், மேலும் இந்த அமைப்பானது துணை விதிகள் தொடர்பான எந்தவொரு தகராறு, மேல்முறையீடு அல்லது சிக்கலைத் தீர்ப்பதற்குப் பொறுப்பாகும்.<br>2. "**அதிகாரம்**" என்பதுஅவ்வப்போது இந்த துணை விதிகளை செயல்படுத்துவதற்காக அறிவிக்கும் | **தீர்மான எண்.102 : அனுமதிக்கப்பட்டது** |

–நகராட்சியை குறிக்கும்.

3. "**இணை சுத்திகரிப்பு**" என்பது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (STP), கழிவுநீர் குழாய்கள் வழியாக கொண்டு செல்லப்படும் வீட்டு கழிவுநீரை சுத்திகரிப்பதோடு மட்டுமல்லாமல், பல்வேறு இடத்திலுள்ள சுகாதார அமைப்புகளிலிருந்து வெளியேற்றப்படும் கசடு மற்றும் கழிவுநீரையும் சுத்திகரிக்கும் செயல்முறையைக் குறிக்கும்.

4. "**கழிவுநீர் வெளியேற்றும் கட்டணம்**" என்பது கழிவுநீரை அகற்றும் வசதிக்கு ஒவ்வொரு முறையும் கழிவுநீர் அகற்றும் வாகனம் வருகை தரும்போது, சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ள –நகராட்சிக்கு கழிவுநீர் அகற்றும் வாகனம் இயக்குபவர் செலுத்த வேண்டிய தொகையைக் குறிக்கும்.

5. "**கழிவு நீக்கம்**" என்பது நிகழ்விட சுகாதார அமைப்புகளிலிருந்து கசடு மற்றும் கழிவுநீரை அகற்ற உரிமம் பெற்றுஇயக்குபவர்களின்செயல்பாட்டைக் குறிக்கிறது,
6. "**அகற்றுதல்**" என்பது அவ்வப்போது அறிவிக்கப்படும்குறிப்பிட்ட இடங்களுக்கு கசடு மற்றும் கழிவுநீரை கொண்டு சென்று வெளியேற்றுவதைக்குறிக்கும்.
7. "**கசடுகழிவு** " என்பது செரிமானமாகாத அல்லது பகுதியளவு செரிமானமான, அரைநீர்ம அல்லது அரை திண்மமாகவோ, கழிவுகள் மற்றும் கழிவறை கழிவுநீர் (black water), இதர கழிவு நீருடன் (grey water)" அல்லது இல்லாமல் சேகரித்தல், சேமித்தல் அல்லது சுத்திகரிப்பு செய்வதைக் குறிக்கும். இது குழி கழிப்பறைகள் மற்றும் நச்சுத் தொட்டிகளின் திடமான அல்லது தேங்கிய கழிவுகளின் உள்ளடக்கமாகும்.
8. "**கசடுகழிவு சுத்திகரிப்பு நிலையம்** (FSTP)" என்பது ஒரு தற்சார்பான திட மற்றும் திரவ கூறுகளை பாதுகாப்பான முறையில் அகற்றுவதற்கும்,சுத்திகரிப்பதற்கும், மறுபயன்பாட்டிற்கும் நிர்ணயிக்கப்பட்ட தரநிலைகளைஅடையஉருவாக்கப்பட்ட கசடுகழிவு சுத்திகரிப்பு நிலையம்.
9. "**இதர கழிவுநீர் (grey water)**" என்பது மனித கழிவு இல்லாத வீட்டு கழிவு நீரைக் குறிக்கும். அது வீடு சுத்தம் செய்தல், சமையலறை மற்றும் குளியலறைகளிலிருந்து வரும் தண்ணீராக இருக்கலாம்.
10. **சுத்திகரிப்பு நிலைய வசதி வழங்கும் உள்ளாட்சி** அமைப்பு என்பது சுத்திகரிப்பு வசதியின் செயல்பாடு மற்றும் பராமரிப்பிற்குச் சொந்தமான மற்றும் பொறுப்பான **வேதாரண்யம்** –நகராட்சியினை குறிக்கும்.
11. "**சுகாதாரமற்ற கழிப்பறை**" என்பது செரித்த மலக்கழிவினைநேரடியாகஅகற்றுதல், விலங்குகளால் அகற்றுதல் அல்லது மலக்கழிவினைதிறந்த வடிகால் அல்லது குழியில் அப்புறப்படுத்துதல், கழிவு முழுமையாக சிதைவடைவதற்கு முன்பு கழிவுகள் வெளியேற்றப்படும் கழிப்பறைகளைக் குறிக்கும்.
12. "**உரிமம்**" என்பது உள்ளாட்சி அமைப்புஅல்லது உள்ளாட்சி அமைப்புகுழுமத்திற்குள், கசடுகழிவுமற்றும் கழிவுநீரை சேகரித்தல், கொண்டு சென்று வெளியேற்றுதல்போன்ற சேவைகளை மேற்கொள்ள இயக்குபவர்களுக்கு வழங்கப்படும் உள்ளாட்சி அமைப்பின்அங்கீகரிக்கப்பட்ட கையெழுத்திடுபவரின் எழுத்துப்பூர்வ அனுமதியைக் குறிக்கும்.
13. "**உரிமக் கட்டணம்**" என்பது உள்ளாட்சி அமைப்புஅல்லது உள்ளாட்சி

அமைப்புகுழுமத்திற்குள்செயல்பட உரிமம் பெறுவதற்கு இயக்குபவர்கள் செலுத்த வேண்டிய தொகையைக் குறிக்கும்.

14. "**உரிமம் பெற்றவர்**" என்பது, கசடுகழிவு மற்றும் கழிவுநீரை சேகரித்தல், கொண்டு சென்று வெளியேற்றுவதற்கு தொடர்புடைய அதிகாரியால் உரிமம் வழங்கப்பட்ட எந்தவொரு நபர் அல்லது நிறுவனம் அல்லது சுய உதவிக்குழு அல்லது சங்கம் அல்லது தனியார் நிறுவனத்தைக் குறிக்கும்.
15. "**உள்ளாட்சி அமைப்பு**" என்பது **வேதாரண்யம்** – நகராட்சியினை குறிக்கும்.
16. "**குழும உள்ளாட்சி அமைப்பு**" என்பது மாநில அரசால் அவ்வப்போது அறிவிக்கப்படும் **வேதாரண்யம்** – நகராட்சி விதிகளின்படி கசடு சுத்திகரிப்பு நிலையம் அல்லது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை ஒன்றாகப் பயன்படுத்தும் பிற உள்ளாட்சி அமைப்புகளைக் குறிக்கிறது.
17. "**குடியிருப்போர்** " என்பது **வேதாரண்யம்** –நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள ஒரு கட்டிடத்தினிலோ அல்லது அதன் ஒரு பகுதிகளிலோ குடியிருக்கும் நபரை குறிக்கும்.
18. "**நிகழ்விடசுகாதார அமைப்பு(OSS)** " என்பது, கழிவுகள் மற்றும் கழிவுநீரை சேகரித்து, சேமித்து, சுத்திகரித்து, உற்பத்தியாகும் இடத்தில் அல்லது அதற்கு அருகில் அகற்றும் ஒரு அமைப்பைக் குறிக்கிறது.
19. "**இயக்குதல் மற்றும் பராமரிப்பு**" (O&M) என்பது கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம்அல்லது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின்செயல்பாடு மற்றும் பராமரிப்பைக் குறிக்கும், மேலும் அத்தகைய செயல்பாடுகள், சேவைகள் மற்றும் வசதிகளை வழங்குதல் ஆகியவற்றுடன் தொடர்புடைய அனைத்து விஷயங்களையும் உள்ளடக்கியது.
20. "**இயக்குபவர்**" என்பது கசடு கழிவு மற்றும் கழிவுநீரை சேகரித்தல், கொண்டு செல்லுதல் மற்றும் அகற்றுதல் போன்ற சேவைகளை மேற்கொள்ள விரும்பும் எந்தவொரு தனிநபர்/ சுய உதவிக்குழு/ சங்கம்/ தனியார் நிறுவனத்தைக் குறிக்கும்.
21. "**உரிமையாளர்**" என்பது **வேதாரண்யம்** –நகராட்சிஎல்லைக்குள் அமைந்துள்ள ஒரு கட்டிடத்தையோ அல்லது அதன் ஒரு பகுதியையோ சொந்தமாக வைத்திருப்பவரை உள்ளடக்கும்.
22. "**சுகாதாரக் கழிப்பறை**" என்பது நச்சு தொட்டி அல்லது நிகழ்விட சுகாதார அமைப்புகள் அல்லது பாதாள சாக்கடை அமைப்புடன் இணைக்கப்பட்ட கழிப்பறை மற்றும் சிறுநீர் பிறை வளாகத்தை குறிக்கும், இது மனித கழிவுகளை (செரிக்கப்படாத கழிவுகள்) பாதுகாப்பாக அடைத்து அகற்றுவதை உறுதி செய்கிறது, இவை ஒவ்வொன்றும் உள்ளாட்சி அமைப்பால் வழங்கப்பட்ட வடிவமைப்பு (design) விவரக்குறிப்புகள் மற்றும் வழிகாட்டுதல்களின்படி கட்டப்பட வேண்டும்.
23. "**கசடு கழிவு**" என்பது ஒரு நச்சு தொட்டி,சேகரிப்பு தொட்டிஅல்லது நிகழ்விட சுகாதார அமைப்பில் உள்ள திரவ மற்றும் திடப்பொருளைக் குறிக்கிறது.
24. "**நச்சு தொட்டி**" என்பது திடப்பொருட்கள் படிதல் மற்றும் காற்றில்லா செரிமானம் ஆகியவற்றின் கலவையின் மூலம் கழிவுநீரை சுத்திகரிக்கும் ஒரு நிலத்தடி தொட்டியைக் குறிக்கும். நச்சு தொட்டி, வடிவமைப்பு மற்றும் கட்டுமானம் தேசிய கட்டிடக் குறியீட்டின் தேவைகளுக்கு இணங்க அமைக்கப்பட வேண்டும். மேலும் 02.01.2023 தேதியிட்ட கசடு கழிவு மேலாண்மை விதிமுறைகள் மற்றும் செயல்பாட்டு வழிகாட்டுதல்கள், அரசாணை எண்;1(நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) – ன் படிஇருக்க வேண்டும்.

25."**கழிவுநீர்**" என்பது கழிவறை கழிவுநீர் (black water) மற்றும் இதர கழிவுநீரின் (grey water) கலவையைக் குறிக்கும், இது சாக்கடைகள் வழியாக கொண்டு செல்லப்படுகிறது. இது கழிவுநீர் அல்லது பயன்படுத்தப்பட்ட நீர் என்றும் அழைக்கப்படுகிறது.

26."**கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்**" (STPs) என்பது பாதுகாப்பான முறையில் சுத்திகரித்து அகற்றுவதற்கும், மறுபயன்பாட்டிற்கும் பரிந்துரைக்கப்பட்ட தரத்திற்கு ஏற்ப கழிவுநீர் சுத்திகரிக்கப்படும் இடத்தைக் குறிக்கும்.

27."**கழிவுநீர்க்குழாய்கள்**" என்பது பொதுமக்கள் வெளியேற்றும் கழிவுநீரை கொண்டுசெல்வதற்காக பயன்படுத்தப்படும் குழாய்களை குறிக்கும்.

28."**குறிப்பிடப்பட்ட வாகனம்**" என்பது கழிவுநீர் தொட்டிகளில் இருந்து கழிவுநீர் மற்றும் கழிவுநீரை வெளியேற்றி கொண்டு செல்வதற்கு உள்ளாட்சி அமைப்பால் அவ்வப்போது அங்கீகரிக்கப்படும் வடிவமைப்பு விவரக்குறிப்புகள் கொண்ட, உள்ளாட்சி அமைப்பில் இயக்குபவர்களுக்கு சொந்தமான மோட்டார் பொருத்தப்பட்ட பம்புகள் மற்றும் சேமிப்பு தொட்டியுடன் கூடிய உறிஞ்சு வாகனங்களைக் குறிக்கும்.

29."**சுத்திகரிப்பு வசதி**" என்பது அவ்வப்போது ஆணையத்தால் அறிவிக்கப்படும் இணைசுத்திகரிப்பு செய்யும்கசடு கழிவு நீர்(FSTP) மற்றும்கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள்(STP) உட்பட, மலக் கசடு மற்றும் கசடு கழிவுகளை சுத்திகரித்து அகற்றும்வடிவமைப்பு விவரக்குறிப்புகள் மற்றும் வழிகாட்டுதல்களைக் கொண்ட ஒரு சுத்திகரிப்பு நிலையத்தைக் குறிக்கும்.

30."**தூய்மை பணியாளர்கள்**" என்பது கசடு கழிவு மற்றும் கழிவுநீரை அப்புறப்படுத்துதல், கொண்டு செல்லுதல் மற்றும் அகற்றுதல் ஆகியவற்றில் ஈடுபடும் உரிமைதாரரால்நியமிக்கப்படும் எந்தவொரு நபரையும் குறிக்கும்.

**3. உரிமையாளர் அல்லது குடியிருப்போரினால் செயல்படுத்தப்பட வேண்டிய சீர்திருத்த நடவடிக்கைகள் மற்றும் உடன்பாடுகள்:**

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் எல்லைக்குள் அமைந்துள்ள ஒரு முழு கட்டிடம் அல்லது அதன் பகுதியின் உரிமையாளர் அல்லது குடியிருப்போர் இந்த துணைவிதிகள் நடைமுறைக்கு வந்த தேதியில் இருந்து பின்வரும் கடமைகளைச் செய்ய பொறுப்பாகிறார்:

1. தமிழ்நாடு அரசு தனது அதிகார வரம்பிற்குள் சுகாதாரமற்ற கழிப்பறைகள் இல்லை என்று அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இதற்கு இணங்கவும், மனிதர்களைக் கொண்டு வேலை செய்வதை தடுக்கவும் மற்றும் அவர்களின் மறுவாழ்வுக்கான சட்டம், 2013, மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022 ஆகியவற்றின் விதிகளின்படியும், சுகாதாரமற்ற கழிப்பறைகளைகட்டுவதும் பயன்படுத்துவதும் கண்டிப்பாக தடை செய்யப்பட்டுள்ளது. நகராட்சிஎல்லைக்குள் உள்ள எந்தவொரு வளாகத்தின் உரிமையாளரோ அல்லது குடியிருப்பாளரோ எந்தவொரு சுகாதாரமற்ற கழிப்பறையையும் கட்டவோ அல்லது இயக்கவோ கூடாது, இதில் கசடு கழிவுகளை நேரடியாக திறந்த வடிகால், திறந்த நிலங்கள் அல்லது நீர்நிலைகளில் வெளியேற்றும் இடங்கள் அடங்கும். தற்போதுள்ள ஒவ்வொரு சுகாதாரமற்ற கழிப்பறையும்

| | | |
|---|---|---|
| | கண்டறியப்பட்டால்,அதிகார அமைப்பில் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள், பொருந்தக்கூடிய வகையில், உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரின் செலவில் இடிக்கப்பட வேண்டும் அல்லது சுகாதார கழிப்பறையாக மாற்றப்பட வேண்டும். மேலும், மனித கழிவினை கையால் அகற்றுவதற்காக அல்லது சுகாதாரமற்ற கழிப்பறைகளை சுத்தம் செய்வதற்காக யாரையாவது பணியமர்த்துவது சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். மீறினால் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022 இன் பிரிவு 179-F மற்றும் மனிதர்களைக்கொண்டு வேலை செய்வதை தடுக்கவும், அவர்களின் மறுவாழ்வுக்கான சட்டம், 2013, இன் விதிகளின்படி, வழக்குத் தொடருதல் மற்றும் அபராதம் உள்ளிட்ட தண்டனை நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கும்.<br><br>2. கசடு கழிவுகள் மற்றும் கழிவுகள் சுற்றியுள்ள பகுதிகளை நிரம்பி வழியாமல் அல்லது மாசுபடுத்தாமல் இருப்பதை உறுதிசெய்ய, தேசிய கட்டிடக் குறியீட்டின்படியும், கழிவு நீர் மேலாண்மை விதிமுறை மற்றும் செயல்பாட்டு வழிகாட்டுதல்கள், அரசாணை எண்;1(நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) விதிகளின்படியும் கழிவு நீர் தொட்டிகள் அமைந்துள்ளன, வடிவமைக்கப்பட்டுள்ளன, கட்டப்பட்டுள்ளன மற்றும் பராமரிக்கப்படுகின்றனவா என்பதை உறுதிசெய்யவும்.<br><br>3. 1939 ஆம் ஆண்டு பொது சுகாதாரச் சட்டத்தின் தொடர்புடைய பிரிவுகளின்படி, முன் அறிவிப்புடன், குறிப்பிட்ட நேரங்களில் ஆய்வு செய்ய அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளை அனுமதிக்கவும்.<br><br>4. நச்சு தொட்டி, கழிவுநீர் தொட்டி அல்லது அதுபோன்ற நிகழ்விட சுகாதார அமைப்புகளின் வடிவமைப்பு மற்றும் செயல்பாட்டுத் தேவைகளுக்கு ஏற்ப அல்லது நகராட்சியால் குறிப்பிடப்பட்டுள்ளபடி குறிப்பிட்டகால இடைவெளியில் கழிவு நீர் வெளியேற்றும் பணியினை மேற்கொள்ளுதல்.<br><br>5. தங்கள் கட்டிடத்திலிருந்துகசடு கழிவுகள் மற்றும் கழிவுநீரை சேகரித்து கொண்டு செல்வதற்கு உரிமம் பெற்ற இயக்குபவர்களை மட்டுமே ஈடுபடுத்துதல்.<br><br>6. போதுமான பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் உரிமம் பெற்ற இயக்குபவர்களால் கழிவுநீர் தொட்டிகள் இயந்திரத்தின் மூலம் சுத்தம் செய்யப்படுவதை உறுதி செய்யவும்.<br><br>**4. நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் துணை விதிகளை அமல்படுத்துதல்**<br>இந்த துணை விதிகள் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து, அதிகாரம் அல்லது சுத்திகரிப்பு நிலைய வசதி வழங்கும் உள்ளாட்சி அமைப்புகள், பின்வரும் செயல்பாடுகளை மேற்கொள்ள உரிமை உள்ளது:<br>1. நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள கட்டிடங்களின் கணக்கெடுப்பு மற்றும் ஆய்வை மேற்கொண்டு, இந்த துணை விதிகளுக்கு இணங்கும் கட்டிடங்களுக்கு இணக்கச் சான்றிதழை வழங்குதல்.<br>2. இந்த துணை விதிகளுக்கு இணங்காத கட்டிடங்களின் உரிமையாளர்கள் அல்லது குடியிருப்போர்களுக்கு அறிவிப்புகளை வழங்குதல். | |

3. அதிகார வரம்புகளுக்குள் உள்ள கட்டிடங்களின் நச்சுத் தொட்டிகள், கழிவுநீர் தொட்டி அல்லது அதுபோன்ற சுத்திகரிப்பு வசதிகளின் விபர பட்டியல்பராமரிக்கப்பட வேண்டும்.
4. துணை விதிகளை செயல்படுத்துதலை மேற்பார்வை செய்தல்.
5. சுத்திகரிக்கப்படாத கசடுகழிவு மற்றும் கசடுகழிவுகளை திறந்த வெளியில் வெளியேற்றுவதைத் தடுப்பது, கூட்டு சுத்திகரிப்பு மற்றும் கசடுகழிவுமேலாண்மை குறித்துபொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படத்தும்விதமாகதகவல், கல்வி மற்றும் தகவல் தொடர்பு பிரச்சாரங்களை நடத்துதல்.
6. இயக்குபவர்கள் உட்பட அவர்களின் ஊழியர்களுக்கு விழிப்புணர்வுமற்றும் திறன் மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வது, அங்கு அவர்களுக்கு கசடு மற்றும் கழிவுநீரை பாதுகாப்பாக அகற்றுவதற்கு சிறந்த நடைமுறைகளைப் பயன்படுத்துவதற்கான விழிப்புணர்வு மற்றும் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.
7. குழும உள்ளாட்சி அமைப்பு அல்லது சுத்திகரிப்பு நிலையம் வசதி வழங்கும் உள்ளாட்சி அமைப்பின் அதிகார வரம்பிற்குள் செயல்படும் உரிமதாரர்களுக்கு, சுத்திகரிப்பு வசதியின் செயல்பாட்டு நேரம், அகற்றும் செயல்முறை, வெளியேற்றகட்டணம் மற்றும் குறிப்பிட்ட நேரங்களில் செல்ல வேண்டிய வழிகளைதெரிவிக்கவேண்டும்.
8. உரிமதாரர்களை நேரடியாக மேற்பார்வை செய்தல் மற்றும் உரிமம் பெற்ற இயக்குபவர்களின் பெயர்களை வெளியிடுதல், உரிமதாரர்களின் விதிமீறல்களைப் புகாரளிப்பதற்கான பொது புகார்/குறை தீர்க்கும் வழிமுறையின் விவரங்களைக் குறிப்பிட்டு பொதுமக்களுக்குத் தெரிவித்தல்.
9. சுத்திகரிப்பு நிலையத்தில் கசடுகழிவு மற்றும் கழிவுகளை சேகரித்தல், கொண்டு செல்வது மற்றும் அகற்றுவதை நேரடியாகஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.
10. குறிப்பிட்ட வாகனங்களின் தரம் மற்றும் பராமரிப்பை ஆய்வு செய்து ஒழுங்குபடுத்துதல்.
11. சேகரிக்கப்பட்டு சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லப்படும் கசடுகழிவின் தரத்தை ஆய்வு செய்தல்.
12. குழும உள்ளாட்சி அமைப்பு அல்லது சுத்திகரிப்பு நிலையம் வசதி வழங்கும் உள்ளாட்சி அமைப்பின் அதிகார வரம்பிற்குள் செயல்படும் இயக்குபவர்களிடமிருந்து கசடு கழிவுநீரை நேரடியாக அகற்றுவதை அனுமதிக்கவும் அல்லது உறுதி செய்யவும், தேவைப்பட்டால் கூட்டு சுத்திகரிப்புவசதியை ஏற்படுத்துதல்.
13. இந்த துணைச் விதிகள் நடைமுறைக்கு வந்த நாளிலிருந்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள், கசடுகழிவு மேலாண்மை விதிமுறைகள் மற்றும் செயல்பாட்டு வழிகாட்டுதல்கள், அரசாணை எண்; 1 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) இணைப்பு 12 (A & B) நாள் 2.1.2023 இன் படி, கசடு கழிவு சுத்திகரிப்புக்கானபுரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டு, செயல்படுத்தவும். குழும உள்ளாட்சி அமைப்பு அல்லது சுத்திகரிப்பு நிலையம் வசதி வழங்கும் உள்ளாட்சி அமைப்புடன், சுத்திகரிப்பு நிலையத்தில் அகற்றஎதுவாக, கிராமப்பஞ்சாயத்துகள் புரிந்துணர்வு ஒப்பந்தங்களைசெயல்பாட்டுநிதி மற்றும் கட்டுப்பாட்டுப் பொறுப்புகளை ஏறுபடுத்துதல் கழிவு அகற்றுதல், இயக்குதல் மற்றும் பராமரிப்புக் கட்டணம் செலுத்துதல், இயக்குநர் உரிமக்கான விதிமுறைகள் மற்றும் பயனுள்ள, பொறுப்பான FSMசேவைகளை வழங்குவதற்கு ஒழுங்கு கண்காணிப்பு ஆகியவற்றுடன் தொடர்புடைய பிரிவுகளை

உட்படுத்துகிறது.

14. கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையத்தினை இயக்குதல் மற்றும் பராமரிப்பிற்கான கட்டணத்தை நகராட்சியின் மக்கள்தொகைக்கு ஏற்பவும், இந்த துணைச் விதிகளின் இணைப்பு 'அ' இல் உள்ள கணக்கீட்டின் படியும், பொருந்தக்கூடிய வகையில் செலுத்துதல்.

15. அந்தந்த அதிகார வரம்பிற்குள் செயல்படும் இயக்குபவர்கள், செல்லுபடியாகும் கழிவு நீர் அகற்றும் உரிமத்தைக் கொண்டிருப்பதை உறுதி செய்யவும்.

16. இந்த துணைச் விதிகளை மீறுவதாகக் கண்டறியப்பட்ட உரிமையாளர்கள் அல்லது குடியிருப்பாளர்கள் அல்லது இயக்குபவர்கள் அல்லது உரிமதாரர்கள் மீது விசாரணைகளை மேற்கொண்டு அபராதம் விதிக்கவும்.

இந்த விதிமுறைகளின் நிர்வாகம் மற்றும் அமலாக்க அதிகாரங்கள், நகராட்சி ஆணையரால்அல்லதுஆணையரால்நியமிக்கப்பட்ட அலுவலர்களிடம் உள்ளன.

5.**இயக்குபவர்கள்/ உரிமதாரர்கள் நியமனம் மற்றும் செயல்பாடு.**

1. இந்த துணைச் விதிகள் அமலுக்கு வந்த நாளிலிருந்து ஒரு குறிப்பிட்டகாலத்திற்குள், **வேதாரண்யம்** –நகராட்சிகழிவுநீர்அகற்றும் சேவைகளை வழங்க ஆர்வமுள்ள இயக்குபவர்களிடமிருந்து விண்ணப்பங்களை வரவேற்கும் அறிவிப்புஆணையர் அல்லது சுத்திகரிப்பு நிலையம் வசதி வழங்கும் உள்ளாட்சி அமைப்பு வெளியிட வேண்டும்.அறிவிப்புவெளியிடப்பட்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பொருந்தும்.
2. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 இன் பிரிவு 374 (e) இன் படி.இயக்குபவர்கள்சம்பந்தப்பட்ட நகராட்சிகளுக்கு விண்ணப்பத்தை சமர்ப்பித்து, உரிமக் கட்டணமாக ரூ. 2000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) அல்லது அவ்வப்போது அறிவிக்கப்படும்கட்டணத்தைசெலுத்த வேண்டும்.
3. விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்ட பிறகு, வரையறுக்கப்பட்ட உரிம அளவுகோல்களைப் பூர்த்தி செய்யும் இயக்குபவர்களுக்கு, இந்த துணை விதிகளின் இணைப்பு 'ஆ'–இல் இணைக்கப்பட்டுள்ள வடிவமைப்பின்படி, வழங்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும் உரிமம் வழங்கப்படும்.
4. செல்லுபடியாகும் உரிமம் இல்லாமல் செயல்படும் உரிமதாரர்கள் இந்த துணை விதிகளை மீறுவதாகக் கருதப்படுவார்கள்.
5. ஆணையரால் அல்லது சுத்திகரிப்பு நிலையம் வசதி வழங்கும் உள்ளாட்சி அமைப்பினரால்அவ்வப்போதுவெளியிடும் வழிகாட்டுதல்களின்படி.உரிமதாரர்கள் நகராட்சியின்குறிப்பிட்ட வாகனங்கள் மற்றும் தொடர்புடைய உபகரணங்கள் ஏதேனும் இருந்தால், அவற்றைப் பராமரித்து இயக்குவதற்கு பொறுப்பாவார்கள்.
6. சுத்திகரிப்பு நிலையம் வசதி வழங்கும் உள்ளாட்சி அமைப்பின் ஆணையரால் அவ்வப்போது

| | | |
|---|---|---|
| | வழங்கப்படும் வழிமுறையின்படி உரிமம் பெற்றவர்கள், நகராட்சி–க்கு சொந்தமான குறிப்பிட்ட வாகனங்களில், கட்டிடங்களிலிருந்து பெறப்படும் கசடு கழிவுகளை பாதுகாப்பாக சேகரித்து கொண்டு செல்வதற்கு பொறுப்பாவார்கள்.<br>7. கழிவுநீர் சேகரிப்பு இடத்திலிருந்து கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்குகொண்டு செல்லப்படும்போது, கழிவுநீர் கசிவு ஏற்படாமல் உரிமதாரர் உறுதி செய்ய வேண்டும். கழிவுநீர் தற்செயலாகக் கசிந்தால், உரிமதாரர் உடனடியாக கழிவுநீர்க் கசிவைக் கட்டுப்படுத்தவும், சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைக்கவும், கசிவு ஏற்பட்ட இடங்களிலிருந்து உடனடியாக அனைத்து கழிவுநீர்க் கசிவுகளையும் அகற்றவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். விபத்து நடந்த குழும உள்ளாட்சி அமைப்பு அருகிலுள்ள நகராட்சி–க்கு, கசிவு குறித்தும், நிகழ்வு நடந்த 24 மணி நேரத்திற்குள் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்தும் உரிமதாரர் தெரிவிக்க வேண்டும்.<br>8. உரிமதாரர்கள் உரிமத்தை நிர்வகிக்கும் விதிகளுக்கு இணங்க வேண்டும்.<br>9. உரிமம் பெற்றவர்கள் அல்லது நகராட்சிக்கு சொந்தமான குறிப்பிட்ட வாகனங்கள் எந்தவொரு வகையான தொழிற்சாலை கழிவுகளையோ அல்லது தொழிற்சாலை கழிவுகளுடன் கலந்த இயற்கை கழிவுகளையோ கொண்டு செல்லக்கூடாது.<br>10. உரிமதாரர்கள் அனைத்து உள்ளூர் சட்டங்களுக்கும் இணங்க வேண்டும், மேலும் உரிமத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட அதன் செயல்பாடுகளின் செயல்திறனுக்குத் தேவையான அனைத்து அனுமதிகளையும் ஒப்புதல்களையும் பராமரிக்க வேண்டும்.<br>11. உரிமதாரர்கள் அல்லது நகராட்சியில் பயிற்சி பெற்ற துப்புரவுப் பணியாளர்களை மட்டுமே பணியமர்த்த வேண்டும். கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்து கொண்டு செல்லும் போது, அத்தகைய துப்புரவுப் பணியாளர்களுக்குத் தேவையான அனைத்து பாதுகாப்பு உபகரணங்களையும் வழங்க வேண்டும்.<br>12. சுத்திகரிப்பு நிலையம் வசதி வழங்கும் உள்ளாட்சி ஆணையரால்அவ்வப்போதுஅறிவிக்கப்படும் செயல்திறன் தரநிலைகளின்படி செய்யப்படுவதை உறுதிசெய்ய, உரிமம் பெற்றவர்கள் போதுமான எண்ணிக்கையிலான துப்புரவுப் பணியாளர்களை, கசடுகழிவு மற்றும் கழிவுநீர் சேகரிப்பு போக்குவரத்திற்கு பணியமர்த்த வேண்டும்.<br>13. உரிமதாரர்கள் அல்லது நகராட்சியால்,மனிதர்களைக்கொண்டு வேலை செய்வதை தடுக்கவும் மற்றும் அவர்களின் மறுவாழ்வுக்கான சட்டம், 2013ன் கீழ் உள்ள விதிகளுக்கு இணங்குவதை உறுதி செய்ய வேண்டும்.<br>14. விபத்து ஏற்படும் போது, உரிமதாரர்கள் – –நகராட்சியால் அறிவுறுத்தப்பட்ட அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.<br>15. சுத்திகரிப்பு நிலையத்தில், கசடுகழிவு மற்றும் கழிவுநீரை பாதுகாப்பாக அகற்றுவதற்கு, உரிமம் பெற்றவர்கள் மற்றும் நகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்கள் பொறுப்பாவார்கள்.<br>16. சுத்திகரிப்பு நிலையத்தில் கசடுகழிவு மற்றும் கழிவுநீரை அகற்றுவதற்கு, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 இன் பிரிவு 376 இன் பிரகாரம், உரிமதாரர்கள் 6000 லிட்டருக்கு மிகாமல் கொள்ளளவு கொண்ட வாகனங்களுக்கு ரூ.200 மற்றும் 6,000 லிட்டருக்கு மேல் கொள்ளளவு கொண்ட வாகனங்களுக்கு ரூ.300 வெளியேற்று கட்டணமாக செலுத்த வேண்டும்.<br>**6.துணை விதிகளை மீறுவதற்கான அபராதங்கள்.** | |

இந்த துணை விதிகளை மீறினால், அதைக் கவனத்தில் கொண்டு பின்வரும் நடவடிக்கைகள்ஆணையரால் எடுக்கப்படும்.

1. ஒரு குற்றம் நிகழும் பட்சத்தில், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022 இன் பிரிவுகள் 179–B முதல் 179–E வரையிலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 இன் பிரிவுகள் 374 முதல் 378 வரையிலும் பொருந்தக்கூடிய இந்த துணை விதிகளை மீறுவது குறித்து அதிகாரி விசாரணை நடத்தி, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022 இன் அத்தியாயம் X–Aபிரிவு 179–Fஇன் படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.
2. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022 இன் பிரிவுகள் 179–B முதல் 179–E வரையிலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 இன் பிரிவுகள் 374 முதல் 378 வரையிலும் உள்ளடக்கப்படாத இந்த துணை விதிகளை மீறும் பட்சத்தில், ஒவ்வொரு மீறலுக்கும் ரூ. 5,000 வரை அபராதம் அல்லது அவ்வப்போது அறிவிக்கப்படும் பிற தொகையை விதிக்க நகராட்சி ஆணையருக்கு உரிமை உண்டு.

3. உரிமதாரர் பத்தி 5துணை பத்திகள் (v) முதல் (xvi) வரை மீறினால் அல்லது இந்த துணை விதிகளைத் தொடர்ந்து மீறினால், சுத்திகரிப்பு நிலையம் வசதி வழங்கும் உள்ளாட்சி அமைப்பின்ஆணையர் காரணம் கேட்கும் அறிவிப்பை வெளியிடவும் மற்றும் இயக்குபவர்க்கு வழங்கப்பட்ட உரிமத்தை ரத்து செய்யவும் உரிமை உண்டு.

4. மேலும், தொடர்ந்து மீறல்கள் ஏற்பட்டால், இந்த துணை விதிகளை மீறுவதை அதிகாரிகள் கவனத்தில் கொண்டு, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022 இன் பிரிவு 161, அத்தியாயம் IX மற்றும் 179–G, H. அத்தியாயம் X–A மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 இன் பிரிவு 379, அத்தியாயம் XI– பகுதி IV இன் படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.
5. எந்தவொரு உரிமையாளரோ அல்லது குடியிருப்பாளரோ சுகாதாரமற்ற கழிப்பறையைக் கட்டியதாகவோ, இயக்கியதாகவோ அல்லது தொடர்ந்து பயன்படுத்தியதாகவோ கண்டறியப்பட்டால், அவர்கள் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022 இன் பிரிவு 179–F இன் கீழ் தண்டனை நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள், மேலும் மனிதக்கழிவுகளை கையாளுபவர்களை பணியமர்த்தப்படுவதைத் தடைசெய்தல் மற்றும் அவர்களின் மறுவாழ்வுச் சட்டம், 2013 இன் விதிகளின் கீழ் வழக்குத் தொடர நடவடிக்கை எடுக்கப்படும், இதில் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளபடி சிறைத்தண்டனை அல்லது அபராதங்கள் விதிக்கப்படும்.

**7. மேல்முறையீடுகள்.**

1. இந்த துணை விதிகள் நடைமுறைக்கு வந்த நாளிலிருந்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் நகராட்சிஒரு மேல்முறையீட்டு அமைப்பை உருவாக்கி தேவையான அறிவிப்புகளை வெளியிடும்.
2. உரிமையாளர், குடியிருப்பாளர் அல்லது இயக்குபவர்கள்/உரிமதாரர்கள், நகராட்சி ஆணையரால்

வழங்கப்பட்ட காரணம் கேட்பு அறிவிப்பை எதிர்த்து மேல்முறையீட்டு அமைப்பிடம் மேல்முறையீடு செய்ய உரிமை உண்டு. மேலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022 இன் பிரிவு 179–1, அத்தியாயம் X–A மற்றும் பிரிவு 380, அத்தியாயம் XI–பகுதி IV, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 இன் பிரிவு 380 ஆகியவற்றின் படி, அத்தகைய காரணம் கேட்பு அறிவிப்பைப் பெற்ற 30 நாட்களுக்குள், அத்தகைய மேல்முறையீட்டு அமைப்பிடம் மேல்முறையீடு செய்யலாம்.

3. விதி 374 இன் கீழ் வழங்கப்பட்ட உரிமத்தை இடைநிறுத்துதல் அல்லது ரத்து செய்தல் அல்லது பறிமுதல் உத்தரவு மூலம் உரிமம் வழங்கும் அதிகாரியின் உத்தரவால் பாதிக்கப்பட்ட எந்தவொரு நபரும் அல்லதுசட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் பறிமுதல் செய்யப்பட்ட வாகனத்தைதிரும்ப பெற, அத்தகைய உத்தரவு கிடைத்த நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள், மேல்முறையீட்டு அதிகாரியிடம் மேல்முறையீடு செய்யலாம்.

4. மேல்முறையீட்டாளருக்கு விசாரிக்க வாய்ப்பு அளித்த பிறகு, மேல்முறையீட்டு அதிகாரி மேல்முறையீட்டின் மீது உத்தரவுகளைப் பிறப்பிப்பார்.

5. அத்தகைய மேல்முறையீட்டு அமைப்பால் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு இணங்க நகராட்சி ஆணையர், உரிமையாளர் மற்றும் இயக்குபவர்கள்/உரிமதாரர்கள் பொறுப்பாவார்கள்.

**8.பிரச்சனைகளை நீக்குவதற்கான அதிகாரம்**

இந்த துணை விதிகளைச்நடைமுறைபடுத்துவதில் ஏதேனும் இடர்பாடு ஏற்பட்டால்இந்த துணை விதிகளைத் திருத்தம் செய்து, நாகப்பட்டினம் மாவட்டத்தின் அரசிதழில் வெளியிட வேண்டும்.

**9.பாதுகாப்பு.**

இந்த துணை விதிகளில் ஏதேனும் ஒன்று, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022 அல்லது தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 அல்லது தமிழ்நாடு ஒருங்கிணைந்த மேம்பாடு மற்றும் கட்டிட விதிகள் 2019 ஆகியவற்றின் ஏதேனும் விதிகளுக்கு முரணாக இருந்தால், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 அல்லது தமிழ்நாடு ஒருங்கிணைந்த மேம்பாடு மற்றும் கட்டிட விதிகள் 2019 அல்லது அவற்றின் அடுத்தடுத்த திருத்தங்கள் இந்த துணை விதிகளை விட மேலோங்கும், அதே நேரத்தில் மற்ற அனைத்து துணை விதிகளும் நடைமுறையில் இருக்கும்.

இணைப்பு 'அ'

கசடு மற்றும் கழிவுநீர் மேலாண்மை துணைச சட்டங்களுக்கான
கசடு சுத்திகரிப்பு நிலையத்தின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு கட்டணம் – சூத்திரம்.

| | | |
|---|---|---|
| சுத்திகரிப்பு நிலையம் வசதி வழங்கும் உள்ளாட்சி அமைப்பு மக்கள் தொகை **அல்லது** சுத்திகரிப்பு நிலையம் வசதி பெரும் உள்ளாட்சி அமைப்பு மக்கள் தொகை<br>--------------------------------------------<br>(சுத்திகரிப்பு நிலையம் வசதி வழங்கும் உள்ளாட்சி அமைப்பு மக்கள் தொகை + சுத்திகரிப்பு நிலையம் வசதி பெரும் உள்ளாட்சி அமைப்பு மக்கள் தொகை) | X | ஒரு வருடத்திற்கான சுத்திகரிப்பு நிலையத்தின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு கட்டணம் |

*நகர்ப்புற–கிராமப்புறக் குழுக்களுக்கு, நச்சுதொட்டிகளைக் கொண்ட வீடுகளுக்கு விகிதாசார மக்கள் தொகை, செலவுப் பகிர்வு சூத்திரத்திற்கானமக்கள்தொகையாகக் கருதப்படுகிறது.

இணைப்பு 'ஆ'
கசடு மற்றும் கழிவுநீர் மேலாண்மை துணை விதிகளுக்கான
படிவம் 12
(தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 இன் விதி 374 (1))

கசடு கழிவை சேகரித்தல், ஏற்றிச்செல்லுதல் மற்றும் வெளியேற்றுவதற்கான தனியார் வாகனங்கள்இயக்குபவர்களுக்கு உரிமம் வழங்குவதற்கான / புதுப்பிப்பதற்கான விண்ணப்ப படிவம்.

| 1. விண்ணப்பதாரர் விவரங்கள் (தனிநபர் / நிறுவனம்/கூட்டாண்மை நிறுவனம்): | | |
|---|---|---|
| 1 | தனிநபர் / நிறுவனத்தின் அனைத்து இயக்குநர்கள் / கூட்டாண்மை நிறுவனத்தின் அனைத்து கூட்டாளிகளின் பெயர்: | |
| 2 | வயது ஆண்டுகளில்: | |
| 3 | தந்தை/கணவர் பெயர்: | |
| 4 | விண்ணப்பதாரரின்(களின்) / நிறுவனத்தின் அனைத்து இயக்குநர்களின் / கூட்டாண்மை நிறுவனத்தின் அனைத்து கூட்டாளிகளின் முகவரிச் சான்று (சான்றின் நகல் இணைக்கப்பட வேண்டும்) | |
| 5 | விண்ணப்பதாரரின்(களின்) / நிறுவனத்தின் அனைத்துஇயக்குநர்களின் / கூட்டாண்மை நிறுவனத்தின் அனைத்து கூட்டாளிகளின் புகைப்பட அடையாள சான்று (சான்றின் நகல் இணைக்கப்பட வேண்டும்): | |
| 6 | ஜிஎஸ்டி எண்: | |
| 7 | பான் எண்: | |
| 8 | மின்னஞ்சல் அடையாளம்: | |
| 9 | தொடர்பு எண்: | |
| 10 | உரிமத்தின் தன்மை: | புது/புதுப்பித்தல் |
| 11 | புதுப்பித்தல் எனில், தற்போதுள்ள உரிமத்தின் விவரம்: | |
| 12 | கசடு / கசடுகழிவை சட்டத்திற்கு புறம்பாக வெளியேற்றியதற்காக ஏற்கனவே வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதா? (ஆம் / இல்லை) | |
| 13 | ஆம் எனில், அத்தகைய வழக்குகளின் விவரங்களை வழங்கவும்: | |
| 14 | ESI மற்றும் EPF பதிவு எண் (பொருந்துமெனில்): | |
| 15 | விவரங்கள் (நகல் இணைக்கப்பட வேண்டும்): | |

2.ஓட்டுநர் விவரங்கள்:

| வ.எண். | பெயர் | பாலினம் மற்றும் பிறந்த தேதி | ஓட்டுநர் உரிம எண் மற்றும் செல்லுபடியாகும் நாள் (நகல் இணைக்கப்பட வேண்டும்) | குடியிருப்பு முகவரி சான்று நகல் இணைக்கப் பட வேண்டும்) | வருட அனுபவம் மற்றும் இடங்கள் | கைபேசி/ தொடர்பு எண் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | | | | | | |
| 2 | | | | | | |
| 3 | | | | | | |
| 4 | | | | | | |
| 5 | | | | | | |
| விபத்துக்களின் வரலாறு / பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் விவரங்கள் / சட்டத்திற்கு புறம்பான கசடு / கசடு கழிவை அகற்றலுக்காக பதிவுசெய்யப்பட்ட புகார்கள், ஏதேனுமிருந்தால் | | | | | | |

**3.வாகன விவரங்கள்**

| வ.எண் | DESCRIPTION | விளக்கம் |
|---|---|---|
| 1 | வாகன பதிவெண் | |
| 2 | வாகன பதிவு சான்றிதழ் புத்தக எண், செல்லுபடி நிலையுடன் நகல் இணைக்கப்பட வேண்டும் | |
| 3 | உரிமைதன்மை: | |
| 4 | குத்தகைக்கு விடப்பட்டது(குத்தகை ஒப்பந்தத்தின் நகல் இணைக்கப்பட வேண்டும்) | |
| 5 | வாகன மாதிரி: | |
| 6 | வாகன வகை [நான்கு சக்கர வெற்றிட வாகனம் அல்லது அதற்கு மேல்) (தயவுசெய்து குறிப்பிடவும்)) | |
| 7 | வாகனத் திறன் (லிட்டரில்): | |
| 8 | வாகன உடற்பாக எண்(Chase No): | |

| | | |
|---|---|---|
| 9 | எஞ்சின் எண். | |
| 10 | வாகன தகுதி சான்று (FC)செல்லுபடியாகும்காலம் | |
| 11 | அனுமதி செல்லுபடியாகும்காலம் | |
| 12 | எடை(கிலோகிராமில்)<br>(அ) மொத்தம்<br>(ஆ) காலியான நிலையில்<br>(இ) கழிவு ஏற்றப்பட்ட நிலையில் | |
| 13 | காப்பீடு செல்லுபடியாகும் காலம் | |
| 14 | மாசு சான்றிதழ் செல்லுபடியாகும்காலம் | |
| 15 | வேகக் கட்டுப்பாட்டுக் கருவி நிறுவப்பட்டுள்ளதா? (ஆம்/இல்லை): | |
| 16 | ஜிபிஎஸ் நிறுவப்பட்டுள்ளதா (ஆம்/இல்லை) வேலை செய்கிறதா (ஆம்/இல்லை) சேதமடையாத அறை (ஆம்/இல்லை): | |
| 17 | வரி செல்லுபடியாகும் காலம் | |
| விபத்துக்களின் வரலாறு / பதிவு செய்யப்பட்ட வழக்குகள் சட்டத்திற்கு புறம்பான கசடு / கசடு கழிவை வெளியேற்றுதலுக்காக பதிவு செய்யப்பட்ட புகார்கள், ஏதேனுமிருந்தால், அதன் விவரங்கள் | | |
| 4.செயல்பாட்டு நேரங்கள் | | |
| 5.வழித்தடம் செயல்பாட்டுப் பகுதி: | | |
| 6. வெளியேற்றும் இடம் | | சம்மந்தப்பட்ட நகராட்சிகளால் அளிக்கப்பட வேண்டும். |

**உறுதிமொழி**

என்னால், அளிக்கப்பட்டுள்ள மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனக்கு தெரிந்தவரையில் மற்றும் நான் நம்புகிற வரையில் உண்மை என்று நான் சான்றளிக்கிறேன். இணைக்கப்பட்டுள்ள அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளையும் நான் படித்து புரிந்து கொண்டேன் என்றும் நான் சான்றளிக்கிறேன் மற்றும் அவற்றுக்கு கட்டுப்படுவதற்கு ஒப்புக்கொள்கிறேன்.

தேதி: விண்ணப்பதாரரின் கையொப்பம்
இடம்:

**விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:**
இந்த படிவம் பின்வருவனவற்றுடன் நகராட்சிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

a. வாகனங்கள் ஆவணங்கள் பதிவுச் சான்றிதழ் வாகன தகுதி சான்றிதழ்,சாலை வரி காப்பிடு சான்றிதழ் மற்றும் பொருட்கள் வாகன அனுமதி மற்றும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான அனைத்து பிற விவரங்கள்..
b. வாகனத்தின் புகைப்படங்கள்:
c. எண் தகட்டைக் (Number Plate) காண்பிக்கிற வாகனத்தின் முன்பக்க மற்றும் பின்பக்கபுகைப்படங்கள்.
d. **விண்ணப்பதாரரைப் பொறுத்தவரையில் சமர்ப்பிக்கப்பட வேண்டியஆவணங்கள்:** விண்ணப்பதாரரின்(களின்) முகவரி சான்று, விண்ணப்பதாரரின்(களின்) புகைப்பட ID சான்று, GST பதிவு சான்றிதழின் நகல், பான் அட்டையின் நகல், முன்னர் வழங்கப்பட்ட உரிமத்தின் நகல் (ஏதேனுமிருந்தால்), ESI மற்றும் EPF பதிவுச் சான்றிதழின் நகல் (பொருந்துமெனில்).

e. பணியமர்த்தப்பட்டுள்ள ஓட்டுநர்களுக்கும், ஊழியர்களுக்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டும் ஆவணங்கள் அரசால் அளிக்கப்பட்ட புகைப்பட அடையாள மற்றும் முகவரி சான்று, மருத்துவ சான்றிதழ் (மாநில அரசின் பதிவு செய்யப்பட்ட மருத்துவரால் அளிக்கப்பட்டது) மற்றும் ஓட்டுநர்உரிமம்.
f. பணியமர்த்தப்பட்ட ஓட்டுநர்கள் மற்றும் ஊழியர்கள் ஒவ்வொருவருக்கும்ரூ.10 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) காப்பீடு செய்யப்பட்ட தனிநபர் விபத்து காப்பீட்டு ஆவணம்..
g. ரூ.2000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) உரிமக் கட்டணம் மற்றும் கட்டணம் செலுத்தும் முறை வேதாரண்யம் நகராட்சி / மாநகராட்சியின் ஆணையாளர் பெயரில் எடுக்கப்பட்ட வங்கி வரைவோலை.

2. சரிபார்த்தல் நோக்கத்திற்காக அசல் ஆவணங்களை விண்ணப்பதாரர் சமர்ப்பிக்க வேண்டும் சமர்ப்பிக்கப்பட்ட எந்தவொரு ஆவணமும் உரிம காலத்தில் காலாவதியானால், உரிமம் பெறுபவர் அந்த ஆவணம் செல்லுபடி காலத்தின் கடைசி தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் ஒரு புதிய செல்லுபடியாகக்கூடிய சான்றிதழ் பெற வேண்டும்.பணியாளரில் ஏதேனும் மாற்றம் இருந்தால், புதிய பணியாளரின் ஓட்டுநர் உரிமத்தின் புகைப்பட நகல், புகைப்பட அடையாளச் சான்று மற்றும் முகவரிச் சான்று ஆகியவை அத்தகைய பணியமர்த்தலிலிருந்து ஏழு நாட்களுக்குள் உரிமம் பெறுபவரால் சமர்ப்பிக்கப்பட வேண்டும். விண்ணப்பப் படிவம் உரிமக் கட்டணம் மற்றும் தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படும்போது, உரிமம் வழங்கும் அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட ஒப்புகை ரசீது, உரிமத்திற்கு ஒப்புதல் அளிக்கப்படும் வரை வைத்திருக்கப்பட

வேண்டும். விண்ணப்பதாரரால் அளிக்கப்பட்ட ஆவணங்களும், தகவல்களும், அந்த விண்ணப்பத்தினை திருப்திகரமாக செயலாக்கம் செய்வதற்கு தேவையான அனைத்து விபரங்களையும் வழங்கவில்லை எனில், ஆணையாளர், விண்ணப்பம் பெறப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் தேவையென கருதுகிற அத்தகைய கூடுதல் விவரக்கூறுகளையும், விவரங்களையும் வழங்குமாறு கேட்கலாம். விண்ணப்பம் மற்றும் அனைத்து முழுமையான / சம்மந்தப்பட்ட விவரங்கள் பெறப்பட்ட பிறகு முப்பது நாட்களுக்குள் உரிமம் ஆணையாளரால் வழங்கப்படும்..

3. சட்டம் அல்லது விதிகளின்படி விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படவில்லை எனில் அல்லது கேட்கப்பட்ட கூடுதல் விவரங்களை விண்ணப்பதாரர் அளிக்கத் தவறுகிறார் எனில் அல்லது சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் உண்மையென சன்றளிக்கப்பட முடியாது எனில், ஆணையாளர் எழுத்துப்பூர்வமான காரணங்களுக்காக அந்த விண்ணப்பத்தினை நிராகரிக்கலாம் அல்லது உரிமத்தினை புதுப்பிக்க மறுக்கலாம் மற்றும் அதன் நகல் ஒன்றை விண்ணப்பதாரருக்கு அளிக்க வேண்டும்.

4. ஒரு உரிமத்தினை புதுப்பிப்பதற்கான விண்ணப்பம், உரிமம் காலாவதியாவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு இந்தப் படிவத்தில் ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் மற்றும் உரிமை வழங்குவதற்கு பொருந்துகிற விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் உரிமத்தினை புதுப்பிப்பதற்கும் பொருந்தும். அத்தகைய புதுப்பித்தல் விண்ணப்பத்திற்கு அது வரப்பெற்றியிருந்து 20 நாட்களுக்குள் மற்றும் உரிமம் காலாவதியாகும் தேதிக்கு முன்னர் ஆணையாளர் தீர்வு காண வேண்டும். உரிமத்தினை புதுப்பிப்பதற்கு, நகராட்சியால் வரையறுக்கப்படுகிற விகிதத்தில் உரிமக் கட்டணம் விண்ணப்பதாரரால் செலுத்தப்பட வேண்டும்..

**சரிபார்ப்பு பட்டியல்**

| வ.எண். | | வாகனங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்டது | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| 1 | விண்ணப்பதாரரின் முகவரி சான்று | | | | | |
| 2 | விண்ணப்பதாரரின் புகைப்பட அடையாளச் சான்று | | | | | |
| 3 | GST பதிவு சான்றிதழின் நகல் | | | | | |
| 4 | PAN அட்டையின்நகல் | | | | | |
| 5 | முன்னர் வழங்கப்பட்ட உரிமத்தின் நகல் ஏதேனும் இருந்தால் | | | | | |
| 6 | ESI மற்றும் EPF பதிவு சான்றிதழ்களின் நகல் பொருந்தினால் | | | | | |
| 7 | பதிவு சான்றிதழ் | | | | | |
| 8 | வாகன தகுதி சான்றிதழ் | | | | | |
| 9 | சாலை வரி | | | | | |
| 10 | காப்பீட்டு சான்றிதழ் | | | | | |
| 11 | வாகன அனுமதி | | | | | |
| 12 | வாகனத்தின் புகைப்படம் வாகன எண் தகட்டினை காண்பிக்கிற முன்பக்கம் மற்றும் பின்பக்கம் | | | | | |
| 13 | அரசு புகைப்பட ID மற்றும் முகவரி சான்று (ஆதார்) ஓட்டுநர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் | | | | | |
| 14 | மருத்துவ சான்றிதழ் ஓட்டுநர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் | | | | | |
| 15 | தனிநபர் விபத்து காப்பிட்டு ஆவணம் ஓட்டுநர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் | | | | | |
| 16 | ஓட்டுநர் உரிமம் | | | | | |
| 17 | வரையறுக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பதாரரால் அளிக்கப்பட்ட கையொப்பமிடப்பட்ட உறுதிமொழி | | | | | |

**கசடு அல்லது கசடுகழிவு போக்குவரத்து இயக்குபவர் உரிமத்திற்கான விண்ணப்பதாரரால் அளிக்கப்பட வேண்டிய உறுதிமொழி.**

1. 2013–ம் ஆண்டு மனிதக்கழிவுகளை கையாளுபவர்களை பணியமர்த்தப்படுவதைத் தடைசெய்தல் மற்றும் அவர்களின் மறுவாழ்வுச் சட்டத்தின்கீழ் தூய்மை பணியாளர்கள்மீதான மற்றும் தூய்மை பணியாளர்கள் கழிவுநீர்க்அமைப்புக்குள் அல்லது கழிவுநீர்த் தொட்டிக்குள் செல்வதன் மீதான தடை குறித்த தமிழ்நாடு அரசின் ஆணைகளை நான் (விண்ணப்பதாரரின் பெயர், வயது, தந்தை பெயர் மற்றும் முகவரி) அறிவேன். அந்த சட்டம், விதிகள், இதுசம்மந்தமாக வெளியிடப்படும் ஒழுங்குமுறைகள்,துணைவிதிகள், அறிவிக்கைகள் மற்றும் அறிவுறுத்தங்களுக்கு கட்டுப்படுவேன் என்று நான் உறுதி கூறுகிறேன்.

2. கசடு மற்றும் கசடுகழிவை சேகரித்தல், ஏற்றிச் செல்லுதல் மற்றும் வெளியேற்றுதல் தொடர்பான சட்டம், விதிகள், அவ்வப்போது வெளியிடப்படும் ஒழுங்குமுறைகள், துணைவிதிகள், அறிவிக்கைகள், அறிவுறுத்தங்கள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை நான் பின்பற்றுவேன்..
3. நான், கசடு அல்லது கசடுகழிவு சேகரித்தல், ஏற்றிச் செல்லுதல் மற்றும் அகற்றுதல் செயல்பாடுகளை அனைத்து பாதுகாப்பு விதிகள் மற்றும் நச்சு வாயுக்கள் இருக்கிறதா என்பதற்கான சோதனை, வழிகாட்டு நெறிமுறைகள் உட்பட பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகளையும் கடைபிடித்த பின்பே மேற்கொள்வேன் மற்றும் போதுமான பாதுகாப்பு துணைக்கருவிகளை அளிப்பேன்.
4. சட்டம், விதிகள், ஒழுங்குமுறைகள், துணைவிதிகள், அறிவிக்கைகள், அறிவுறுத்தங்கள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் வகையினங்களில் எதனையும் பின்பற்றவில்லை எனில், எனக்கு அளிக்கப்பட்ட உரிமம் ரத்து செய்யப்படலாம் என்பதை நான் புரிந்துகொண்டேன். மேற்கூறிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் தெளிவாக புரிந்து கொள்ளப்பட்டது என்றும் அவை முழுமையாக கடைப்பிடிக்கப்படும் என்றும் இதன்மூலம் நான் உறுதிகூறப்படுகிறது..

தேதி

பெயர்: கையொப்பம்

படிவம் 13

**விதி 374(1)மற்றும் (4–ஐப் பார்க்கவும்) தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023**

**கசடு மற்றும் கசடுகழிவை சேகரித்தல், ஏற்றிச் செல்லுதல் மற்றும் அகற்றுதலுக்கான உரிமம்**

ல் வசிக்கும், ன் மகன்/மனைவி/மகள்,திரு/திருமதி/செல்வி

உரிம எண்:

உரிமம் வைத்திருப்பவர் :

வாகனப் பதிவு எண்(கள்) :

ஓட்டுநர்கள் பெயர், ஓட்டுநர் உரிம எண்ணுடன் :

உரிமம் வைத்திருப்பவருக்கு ஒதுக்கப்பட்ட

வழித்தடங்கள் / பகுதி(கள்) :

வெளியேற்றும் இடம்(ங்கள்) :

செயல்பாட்டு நேரம் :

இந்த உரிமம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்கு நடைமுறையில் இருக்கும், மற்றும் இது மாற்றத்தக்கதல்ல.

செல்லுபடியாகும் காலம்–––––––––––––––முதல்––––––––––––––––வரை

உரிமத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் இணைக்கப்பட்டுள்ளன.. அவ்வப்போது

அரசால் மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால்/நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் வெளியிடப்படும் அனைத்து விதிகள், ஒழுங்குமுறைகள்.அறிவுறுத்தங்கள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.

ஆணையரின் முத்திரை மற்றும் கையொப்பம்,
நகராட்சி மன்றம் கராட்சி/

இடம்:
தேதி:

**விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்.**

1. உரிமம் வழங்கப்பட்ட தேதியிலிருந்து உரிமம்இரண்டு வருடங்களுக்கு செல்லுபடியாகும். மற்றும் அது மாற்றத்தக்கதல்ல அந்த உரிமம் வெளிப்படையாகத் தெரியும் வகையில் குறிப்பிட்ட வாகனத்தின் முன்பக்க கண்ணாடி முகப்பில் மீது காட்சிப்படுத்தப்பட வேண்டும்..
2. அந்தக் குறிப்பிடப்பட்ட வாகனம் எந்தவொரு வகையிலுமான தொழிற்சாலை கழிவுகள் அல்லது தொழிற்சாலை கழிவுகளுடன் கலந்த இயற்கை கழிவுகளை சேகரித்தல் மற்றும் ஏற்றிச்செல்லுதலுக்கு பயன்படுத்தப்படக்கூடாது..
3. கசடு மற்றும் கசடு கழிவை சேகரித்தல், ஏற்றிச் செல்லுதல் மற்றும் வெளியேற்றுதலின்போது உரிமத்தினை கேட்டால் உரிமம் பெறுபவர் அதனை காட்ட வேண்டும்..
4. உரிமம் பெறுபவர்,–
   (அ) செயல்பாட்டு நேரங்கள்; மற்றும்
   (ஆ) உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள, வாகன செயல்பாட்டு பகுதி / வழித்தடங்களை கடைப்பிடிக்க வேண்டும்.
5. ஏற்றிச் செல்லும்போது ஏற்படும் கசிவுகளை சுத்தப்படுத்தத் தவறினால், அதனை சுத்தப்படுத்துவதற்கு, நேர்வுக்கேற்ப, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பால் செய்யப்படும் அதுதொடர்பான செலவுகளை, அபராதக் கட்டணங்களுடன் சேர்த்து, உரிமம் பெறுபவர் செலுத்த வேண்டும்.
6. இந்த உரிமம் வழங்குதல் என்பது, பல்வேறு மற்ற பொருந்தக்கூடிய விதிகள், சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளின்கீழ், வியாபாரம் அல்லது வர்த்தகம் அல்லது நடவடிக்கைக்கு வேண்டப்படுகிற தேவைகள் அல்லது உரிமங்கள் அல்லது இசைவுகளிலிருந்து விலக்களிக்கப்பட்டதாக பொருள்படாது.
7. உரிமம் பெறுபவர் கசடு மற்றும் கசடுகழிவை, உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அதனை கொட்டுவதற்கான வசதிகளில், செயல்பாட்டு நேரங்களின்போது, கொட்ட வேண்டும், கழிவுநீர்த் தொட்டிகள் / குழிகளிலிருந்து கசடை அகற்றுவதற்கும், அதனை கொட்டுவதற்கென நியமிக்கப்பட்ட வசதிகளுக்கு கசடு மற்றும் கசடுகழிவை எடுத்துச் செல்வதற்கும், உரிமம் பெற்ற இயக்குபவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.
8. உரிமம் பெறுபவர், கசடு மற்றும் கசடுகழிவை, அதனை வெளியேற்றுவதற்கான, நேர்வுக்கேற்ப, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் வசதிகள் தவிர, எந்தவொரு இடம் அல்லது தளத்திலும்

வெளியேற்றுவதாக கண்டறியப்பட்டால், மேற்படி உரிமத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறியதாகக் கருதப்படும்.

9. உரிமம் பெறுபவர், சேகரித்தல், ஏற்றிச் செல்லுதல் மற்றும் கொட்டுதலுக்கான ஒவ்வொரு ஊர்திப் பயணத்தையும் பதிவு செய்கிற ஒரு ஊர்திக் குறிப்பேட்டை பராமரிக்க வேண்டும் மற்றும் அதனை நேர்வுக்கேற்ப, சம்மந்தப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புக்கு, ஒரு வருடத்தில் உள்ள ஒவ்வொரு காலாண்டின் 10–ம் நாளுக்கு முன்பாகவும் சமர்ப்பிக்க வேண்டும்.
10. உரிமம் பெறுபவர், கசடு மற்றும் கசடுகழிவை ஏற்றிச்செல்வதற்கு பயன்படுத்தப்படும் குறிப்பிடப்பட்ட வாகனத்தில், செயற்கைக்கோள் வழிகாட்டிக் கருவி (GPS) அல்லது, நேர்வுக்கேற்ப, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வாகன கண்காணிப்பு அமைப்பை பொருத்த வேண்டும். உரிமம் பெறுபவரின் நேர்வுக்கேற்ப, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு, அந்த GPS கருவியை பொருத்துவதற்கு அனுமதிக்க வேண்டும். உரிமம் பெறுபவர், GPS கருவி செயல்பாட்டில் உள்ளது மற்றும் தடையின்றி தரவுகளை அனுப்புகிறது என்பதை உறுதிப்படுத்த வேண்டும். வரப்பெறும் தரவுகளில் ஏற்படும் தடை, உரிமத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறியதாக கருதப்படும்

11. உரிமம் பெறுபவர், எந்தவொரு விபத்தை தவிர்க்கும் வகையில், குறிப்பிட்ட வாகனத்தை நன்கு செயல்படுகின்ற நிலையில் பராமரிக்க வேண்டும்.

12. உரிமம் பெறுபவர், கழிவுநீர் சேகரிப்பு இடத்திலிருந்து கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்குகொண்டு செல்லப்படும்போது, கழிவுநீர் கசிவு ஏற்படாமல் உரிமதாரர் உறுதி செய்ய வேண்டும். கழிவுநீர் தற்செயலாகக் கசிந்தால், உரிமதாரர் உடனடியாக கழிவுநீர்க் கசிவைக் கட்டுப்படுத்தவும்,சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைக்கவும், கசிவு ஏற்பட்ட இடங்களிலிருந்து உடனடியாக அனைத்து கசிவுகளையும் அகற்றவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். உரிமம் பெறுபவர் அருகில் அமைந்துள்ள, நேர்வுக்கேற்ப, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு அலுவலகத்திற்கு மற்றும் / அல்லது அந்த நிகழ்வு நடந்த இடத்திற்கு அருகில் உள்ள கழிவுநீர் வெளியேற்றும் வசதிக்கு (decanting facility), கசிவு குறித்தும் அந்நிகழ்வு நடந்த பிறகு உடனடியாக எடுக்கப்பட்ட. நடவடிக்கை குறித்தும் தெரிவிக்க வேண்டும்..

13. உரிமம் பெறுபவர், பணியமர்த்தப்பட்டுள்ள ஒவ்வொரு ஓட்டுநர் மற்றும் தூய்மை பணியாளர்கள்,காலமுறை பயிற்சிக்கு செல்வதையும், நேர்வுக்கேற்ப, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பால், அவ்வப்போது ஏற்பாடு செய்யப்படுகிற பிற நடவடிக்கைகளில் பங்கேற்கிறார்கள் என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்..

14. உரிமம் பெறுபவர், பணியமர்த்தப்பட்டுள்ள அனைத்து ஓட்டுநர்களும்,தூய்மை பணியாளர்களும், கழிவுநீர்க்குழாய்கள் மற்றும் கழிவுநீர்த் தொட்டிகளை பராமரிப்பதற்கும், இயக்கமுறை சுத்தப்படுத்தலுக்கும், அவ்வப்போது அறிவிக்கை செய்யப்படுகிற சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளின்படி நிலையான இயக்க நடைமுறைகளை பின்பற்றுகிறார்கள் என்பதை உறுதிப்படுத்த வேண்டும். உரிமம் பெறுபவர், பணியமர்த்தப்பட்டுள்ள ஓட்டுநர்கள் மற்றும்

தூய்மை பணியாளர்களுக்கு பொருத்தமான பாதுகாப்பு உபகரணங்கள் / பாதுகாப்பு விசைமாற்றிகள் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் கசடு மற்றும் கசடுகழிவு சேகரித்தல், ஏற்றிச்செல்லுதல் மற்றும் வெளியேற்றுதலின் போது அவை பயன்படுத்தப்படுகின்றன என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்..

15. உரிமம் பெறுபவர், பணியமர்த்தப்பட்டுள்ள ஒவ்வொரு ஓட்டுநரும், தூய்மை பணியாளர்களும்வருடாந்திர மருத்துவ பரிசோதனைக்கு செல்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்த வேண்டும். பரிசோதனை குறித்த பதிவேட்டை உரிமம் வழங்கும் அதிகாரிக்கு சமர்ப்பிக்க வேண்டும்..

16. உரிமம் பெறுபவர், பணியமர்த்தப்பட்டுள்ள ஒவ்வொரு ஓட்டுநர் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கும், ஒவ்வொரு வருடமும் ரூபாய் 10 இலட்சத்திற்கான (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) தனிநபர் விபத்து காப்பீடு எடுக்க வேண்டும். காப்பீட்டு ஆவணத்தினை, உரிமம் வழங்கும்போதும் புதுப்பிக்கும்போதும் நேர்வுக்கேற்ப, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

17. அனைத்து நேரங்களிலும், வாகனம் மற்றும் உபகரணத்தின் பாதுகாப்பான இயக்கத்திற்கு, ஓட்டுநர் மற்றும் சேவை வழங்குநர்கள் பொறுப்பாவார்கள். போக்குவரத்து விதிகள் அனைத்து நேரங்களிலும் பின்பற்றப்பட வேண்டும். கசடு மற்றும் கசடுகழிவினை ஏற்றிச்செல்வதற்கு போதுமான பயிற்சி பெற்ற மற்றும் தகுதிவாய்ந்த ஓட்டுநர்கள் பணியமர்த்தப்படுகிறார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்கு அனைத்து விபத்துகள் மற்றும் நற்குறிப்புகளும் உரிமம் பெறுபவரால் மறுஆய்வு செய்யப்படவும், விசாரிக்கப்படவும் வேண்டும். கசடு கசிவு ஏதும் இல்லை அல்லது வாகனத் தொட்டிக்கு வெளியில் ஏதும் கசியவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கு, பொதுச் சாலைகளில் ஓட்டுவதற்கு முன்பு, ஓட்டுநர்கள் அனைத்து வாகனங்களையும் ஆய்வு செய்ய வேண்டும். கசடை ஏற்றிச்செல்வதற்கு பயன்படுத்தப்படும் அனைத்து வாகனங்களிலும், அனைத்து நேரங்களிலும், சுண்ணாம்பு அல்லது குளோரின் சாயம் போன்ற கசிவு கட்டுப்பாடு அல்லது உறிஞ்சு பொருட்கள் மற்றும் தொற்றுநீக்க பொருட்கள் வைத்திருக்கப்பட வேண்டும். கழிவுநீர் திறப்புவாய், வடிகால் அமைப்பு பகுதிகள், கால்வாய்கள், சிற்றோடைகள், ஆறுகள் அல்லது மற்ற தண்ணீர் பெறுகிற அமைப்புகள் அல்லது நிலத்தில் கசடு அல்லது கசடுகழிவு எதுவும் வெளியேற்றுவதற்கு அனுமதிக்கக்கூடாது; மற்றும் வெளிப்படையான படிவங்கள் முறையாக நிரப்பப்பட வேண்டும்

18. உரிமம் பெறுபவர், 2013–ம் ஆண்டு மனித துப்புரவுப் பணியாளர்களாக பணியமர்த்தலை தடைசெய்தல் மற்றும் அவர்களது மறுவாழ்வு சட்டத்தின் (2013–ம் ஆண்டு மத்தியச் சட்டம் 25)வகையினங்களுக்கு மாறாக, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, மனித தூய்மை பணியாளரையோ அல்லது எந்தவொரு நபரையுமோ, ஒரு கழிவுநீர்திறப்புவாய் அல்லது கழிவுநீர்த் தொட்டியினை தீங்குவிளைவிக்கிற வகையில் சுத்தப்படுத்துவதில், ஈடுபடுத்தவோ அல்லது பணியமர்த்தவோ கூடாது.

19. உரிமம் பெறுபவர், நிறுவனத்தின் பெயர், தொடர்பு எண், நிறுவனத்தின் அடையாளம் மற்றும் கசடு ஏற்றிச்செல்லும் வாகனத்தின் ஊர்திக்கூடு எண் ஆகியவை கசடை ஏற்றிச் செல்வதற்கு பயன்படுத்தப்படும் வாகனத்தின் இருபுறமும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்த வேண்டும். மேற்படி தகவல் குறைந்தபட்சம் 3 அங்குலம் உயரமுள்ள நிலையான மற்றும் தெளிவான எழுத்துக்களை பயன்படுத்தி எழுதப்பட வேண்டும் மற்றும் அது ஒரு பிரதிபலிப்பு பொருளால் செய்யப்பட்டிருக்க வேண்டும்

20. ஒரு செல்லுபடியாகக்கூடிய உரிமம் வைத்திருக்கிற எந்தவொரு உரிமம் பெற்றவரும், கசடை ஏற்றிச்செல்வதற்கு பயன்படுத்தப்படுகிற அனைத்து வாகனங்களையும், வாகனத் தொட்டிகளையும், பின்வரும் தேவைகளின்படி பராமரிக்க வேண்டும்:

(i) கசடுகழிவு மற்றும் வீட்டுக்கழிவுகளை ஏற்றிச்செல்வதற்கு பயன்படுத்தப்படுகிற குறிப்பிட்ட வாகனம், கசடு மற்றும் கசடுகழிவை பாதுகாப்பாக ஏற்றிச்செல்லும் வகையில் கசிவற்ற ஊர்திக்கூட்டையும், பூட்டமைப்பையும் கொண்டிருக்க வேண்டும் மற்றும் மற்றொரு வாகனம் அல்லது எந்தவொரு நிலையான கட்டமைப்புடனும் ஏற்படும் மோதலை தாங்குவதாக இருக்க வேண்டும்.

(ii) குறிப்பிட்ட வாகனம், சாலையில் செல்வதற்குரிய தகுதி குறித்த நில போக்குவரத்து அலுவலக பாதுகாப்பு தரநிலைகளின்படி, நன்கு இயங்கும் நிலையில் இருக்க வேண்டும்.

(iii) சேகரிப்பு வாகனம் மற்றும் வாகனத்தொட்டி அதிகப்படியான நாற்றம் அல்லது பொதுச்சுகாதார தீங்கினை தடுக்கும் வகையில் பராமரிக்கப்பட வேண்டும்.

(iv) குறிப்பிட்ட வாகனம் நீர்க்கசிவின்றி இருக்க வேண்டும்.

(v) அனைத்து குழாய்கள், வால்வுகள் மற்றும் இணைப்புகள் சுத்தப்படுத்துவதற்கு ஏற்றதாக இருக்க வேண்டும்

(vi) மாற்றும்போது அல்லது ஏற்றிச்செல்லும்போது எந்தவொரு பொருளும் கசியாது அல்லது வாகனத்தொட்டிக்கு வெளியில் செல்லாது என்கிற வகையில் அனைத்து உள்புகும் மற்றும் வெளியேறும் இணைப்புகளும் கட்டுமானம் செய்யப்படவும், பராமரிக்கப்படவும் வேண்டும்.

(vii) கசடுகழிவு சுத்திகரிப்பு நிலையத்தில்தெளித்தல் அல்லது வெள்ளப்படுத்துதல் இல்லாத அளவிற்கு வெளியேற்றுப் வேகத்தினை கட்டுப்படுத்தும் வகையில் வெளியேற்று வழிகள் வடிவமைக்கப்பட வேண்டும்.

(viii) வெளியேற்றுக் குழாயானது, வாகனத் தொட்டியின் முடிவில் இருந்து ஆறு அங்குலத்திற்கு குறையாமல் வெளியில் நீட்டிக்கொண்டிருக்க வேண்டும், மற்றும்

(ix) வெளியேற்றுக் குழாயின் முடிவுப்பகுதியில், திருகித் திறக்கும் மூடி பொருத்தப்பட வேண்டும்.

**படிவம் 14**

(விதி 377 (b)–ஐப் பார்க்கவும்]

**கசடு மற்றும் கசடுக்கழிவு ஏற்றிச்செல்லும் பயண விவரங்களுக்கான ஊர்திக் குறிப்பேடு**

| வ எண், | பயண தேதி | வாகன எண் | விண்ணப்பதாரரின் உரிம எண் | பயண நேரம் | | சேகரிக்கும் இடம் | வெளியேற்றும் இடம் | மொத்த பயண தூரம் | வளாகங்களின் வகை | ஓட்டுநரின் | ஓட்டுநர் தொடர்பு எண் | கையொப்பம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ஆரம்பம் | முடிவு | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.1194/2025/எச்1

ஒம்/–

மா.மீ.புகழேந்தி

நகர்மன்றத் தலைவர்